


Follow us:
# தமிழன்
THAMILAN தமிலன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர்: 05, இதழ்: 127 குரோதி வருடம், மார்கழி மாதம் 02ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(17.12.2024) ஹிஜ்ரி 1446, ஜ. ஆகிர் - 15, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12




# பாரதத்துக்கு பாதிப்பு வர இடமளியேன்!

★ தமிழர் அபிலாஷைகள் ★ அரசியலமைப்பு அமுலாக்கம்
★ மாகாண சபைத் தேர்தல் ★ நல்லிணக்கம்

# உறுதிமொழிகளை நிறைவேற்றுக

இலங்கையில் அதற்கு இடமில்லையென ஜனாதிபதி அநுர டில்லியில் அறிவிப்பு



பாரதப் பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதி அநுரவிடம் வலியுறுத்து

» 02பக்கம்

## அநுர அரசுக்கு முகாமைத்துவ அனுபவம் போதாது

### வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் படுதோல்வியென எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

''தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்துக்கு முகாமைத்துவ ரீதியான இயலாமை ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. அதற்காக தேர்தலுக்கு முன்னர் இவர்கள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளிலிருந்து தப்பிக்க முடியாது. இந்த அரசாங்கம் தேர்தலுக்கு முன்னர் கூறியதைபோன்று, ஆட்சிக்கு வந்து 24 மணிநேரத்தில் மக்களின் அத்தியாவசியப் பிரச்சினைகளுக்கு ஒரே நேரத்தில் நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டத்தில் தோல்வியடைந்துள்ளது. எனவே, வாக்குறுதிகளை உடனடியாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்''.... » 02 பக்கம்



## புதிய சபாநாயகர் ஜகத்?

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் புதிய சபாநாயகர் பதவிக்கு பொலனறுவை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஜகத் விக்ரமரத்னவை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

புதிய சபாநாயகர் தெரிவு தொடர்பில் தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதி சபாநாயகர் கலாநிதி றிஸ்வி சாலி, அமைச்சர்... » 02 பக்கம்

## அர்ச்சுனாவுக்கு கடும் எச்சரிக்கையுடன் பிணை!



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் புகுந்து ரௌடித்தனத்தில் ஈடுபட்ட இராமநாதன் அர்ச்சுனா கடுமையாக எச்சரிக்கப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்று (16) அவரை கைது செய்து, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் அண்மையில் நுழைந்த அர்ச்சுனா எம்.பி, சுகாதார தொண்டர்களின் பிரச்சினையை தீர்க்க வேண்டுமென்ற அணுகுமுறை இல்லாமல், வழக்கம்போல... » 02 பக்கம்

## உஷ்



அரிசி இறக்குமதி பின்னடைவை சந்தித்துள்ளதால் இன்னும் இரண்டு வாரங்களில் நாட்டில் அரிசிக்கு தட்டுப்பாடு வரலாம் என அரச உள்வீட்டுத் தகவல்கள் சொல்கின்றன.

சதொச மற்றும் வர்த்தக கூட்டுத்தாபனம் அரிசி இறக்குமதிக்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்தியாவில் அரிசி விலை அதிகரித்துள்ளதால் இறக்குமதியில் தலையிட மறுக்கிறார்களாம் அரிசி இறக்குமதியாளர்கள்.

## சூழ்ச்சிகள் குறித்து இரகசியத் தகவல்கள்

### ஞானசார தேரர் எச்சரிக்கை



» 02பக்கம்

## புதிய சபாநாயகர் தெரிவுடன் பாராளுமன்றம் இன்று கூடும்



» 02பக்கம்

## கமெண்ட் கந்தர்...



இராமாயண வரலாறு பற்றி அநுரவுடன் இந்தியா பேசுது.. இங்கே என்னெண்டா வானரங்களை ஒழிக்குறதுக்கான வேல நடக்குது...



## புதிய சபாநாயகர் ஜகத்?...

நிஹால் கலப்பத்தி உள்ளிட்ட பலரது பெயர்கள் ஊடகங்களில் வெளிப்படுத்தப்பட்ட நிலையில் அவை தவறானது என தெரிவிக்கப்படுகிறது.

அதனடிப்படையில், தேசிய மக்கள் சக்தியின் பொலனறுவை மாவட்டத்தில் விருப்பு வாக்குப் பட்டியலில் இரண்டாம் இடம்பிடித்த பாராளுமன்ற உறுப்பினர் விக்ரமரத்ன அநேகமாக சபாநாயகராக தெரிவு செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அவர் 51,391 விருப்பு வாக்குகளை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சபாநாயகர் பதவியிலிருந்து அசோக ரன்வல விலகியநிலையில், சபாநாயகர் பதவிக்கான வெற்றிடம் ஏற்பட்டது. இந்நிலையில், சபாநாயகர் பதவியிலிருந்து விலகுவதாக அசோக ரன்வல அனுப்பிய இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் சட்டத்தரணி குஷானி ரோஹணதீரவுக்கு எழுத்துமூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

10ஆவது பாராளுமன்றத்தின் புதிய சபாநாயகராக தெரிவு செய்யப்பட்ட அசோக ரன்வல தாம் பதவியிலிருந்து விலகுவதாக கடந்த 13ஆம் திகதி கடிதமூலமாக ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தார். அரசியலமைப்புச் சட்டத்தின் 64(2) உறுப்புரையின் பிரகாரம் சபாநாயகர், பிரதி சபாநாயகர் அல்லது பிரதி செயற்குழுவின் தலைவர் ஆகியோரில் யாராவது ஒருவர் பதவி விலகினால் அதுதொடர்பில் உத்தியோகபூர்வ கையொப்பத்துடன் கூடிய கடிதத்தினூடாக ஜனாதிபதிக்கு அறிவிக்க வேண்டும்.

அக்கடிதம் ஜனாதிபதியின் செயலாளினூடாக பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு எழுத்துமூலமாக அறிவிக்கப்படும். இந்நிலையில், எதிர்க்கட்சியிலிருந்து சபாநாயகர் பதவிக்காக ஒருவரின் பெயர் இன்றைய தினம் (17) பாராளுமன்ற அமர்வின்போது பரிந்துரைக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார நேற்றுமுன்தினம் (15) கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, புதிய சபாநாயகர் நியமனம் குறித்து நேற்று (16) இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் ஆராயப்பட்டுள்ளது. அதற்கமைய இன்றைய தினம்(17) சபை அமர்வின்போது எதிர்க்கட்சியின் சார்பில் சபாநாயகர் பதவிக்கு வேறு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டால் இரகசிய வாக்கெடுப்பு நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# நிமலை கட்சித் தலைவராக ஏற்றுக்கொண்டார் மைத்ரி

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினராக சரத்சந்திர என்பவரினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியின் தலைவராக செயற்படுவதற்கு தடைவிதித்து கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் இடைக்கால தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் அந்த பதவியை வகிப்பதினூடாக நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் செயற்பட்டதாக தெரிவித்து இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஷஷி மஹேந்திரன் ஆகியோர் முன்னிலையில் நேற்று பரிசீலிக்கப்பட்டுள்ளது.

அதன்போது, மைத்ரிபால சிறிசேனவின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்ரி குணரத்ன நீதிமன்றத்தின் முன்னிலையில், தனது கட்சிக்காரர் இதனை தொடர்ந்து சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தை வகிக்கப்போவதில்லை என்றும் தற்போது கட்சியின் தலைவராக செயற்படும் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் செயலாளர் தொடர்பில் எதிர்ப்பு வெளியிடப்போவதில்லை என்றும் அறிவித்துள்ளார். அதற்கமைய, இந்த மனுவை இணக்கப்பாட்டுக்கு கொண்டுவருவதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் ஜனாதிபதி சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார். இந்த அறிவிப்பு தொடர்பில் திருப்தியடைவதாகவும் அதனடிப்படையில் மனு இணக்கப்பாடு ஏற்படுத்துவதற்கு இணங்குவதாகவும் மனுதாரர் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி ஷாந்த ஜயவர்தன நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

## புதிய சபாநாயகர்...

பாராளுமன்றம் இன்று (17) காலை 9.30 மணிக்குக் கூடியதன் பின்னர் அரசியலமைப்பு மற்றும் நிலையியற் கட்டளைகளுக்கு அமைய முதலில் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிப்பிரமாணம் இடம்பெறவிருப்பதுடன், இதனைத் தொடர்ந்து புதிய சபாநாயகரின் தெரிவு இடம்பெறவிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (16) பிரதி சபாநாயகர் வைத்தியகலாநிதி ரிஸ்வி சாலி தலைமையில் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது. டிசம்பர் 17 மற்றும் 18ஆம் திகதிகளில் முன்னர் தீர்மானிக்கப்பட்ட பாராளுமன்ற அலுவல்களில் திருத்தங்கள் சில இங்கு மேற்கொள்ளப்பட்டன.

இன்று (17)செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி முதல் 9.45 மணி வரை புதிய பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிப் பிரமாணத்துக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியினால் பெயரிடப்பட்ட தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களில் மூவரும், புதிய ஜனநாயக முன்னணியினால் பெயரிடப்பட்ட தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் இவ்வாறு பதவிப்பிரமாணம் செய்யவுள்ளனர். இதனைத் தொடர்ந்து புதிய சபாநாயகர் தெரிவுக்காகவும் அதன் பின்னர் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காகவும் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, மு.ப 11.00 மணி முதல் பி.ப 3.00 மணிவரை பாடசாலை மாணவர்களுக்கான காகிதாதிகளுக்கான ஒதுக்கீடுகளை மேற்கொள்வது தொடர்பான குறைநிரப்பு தொகை மதிப்பீடு விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 2024.12.18ஆம் திகதி மீண்டும் இந்த விவாதம் தொடரவுள்ளது. இதற்கமைய முன்னர் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய, 2024 வீதி அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான ஒதுக்கீடுகளை மேற்கொள்ளும் குறைநிரப்புத் தொகை மதிப்பீடு விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படாது.

இதன் பின்னர், பி.ப 3.00 மணிமுதல் மாலை 6.30 மணிவரை சர்வதேச இறையாண்மை பத்திரங்களை மறுசீரமைப்பது தொடர்பில் எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு பிரேரணை தொடர்பான விவாதத்துக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் 18ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்குப் பாராளுமன்றம் கூடவிருப்பதுடன், மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மு.ப 10.30 மணி முதல் மாலை 5.00 முதல்நாள் ஒத்திவைக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான காகிதாதிகளுக்கான ஒதுக்கீடுகளை மேற்கொள்வது தொடர்பான குறைநிரப்பு தொகை மதிப்பீடு பற்றிய விவாதத்தை நடத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய, முன்னர் தீர்மானிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட விடயங்களை பிறிதொரு தினத்தில் விவாதத்துக்கு எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பி.ப 5. 00 மணி முதல் பி.ப 5.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான இரண்டு கேள்விகளுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## சூழ்ச்சிகள்...

''நாட்டின் சமத்துவத்துக்கு இன்றியமையாத ஒருசில செயற்பாடுகள் இரகசியமான முறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக எங்களுக்கு தகவல்கள் கிடைக்கின்றன. ஒருசில இனவாத தரப்புகளிடமிருந்து ஆச்சரியமடையும் வகையிலான சில தகவல்களும் எங்களுக்கு கிடைத்த வண்ணம் இருக்கின்றன. எங்களிடமிருக்கும் தகவல்கள் அழிக்கப்படலாம். நாட்டின் எதிர்காலம் எவ்வாறு அமையுமென்று கூற முடியாது. அதனால், எச்சரிக்கைக்கு அப்பால் சென்று இந்த செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்காக தற்போதே நடவடிக்கை எடுக்கவேண்டும். எங்களிடமிருக்கும் தகவல்களை வெளிப்படையாக ஒப்படைப்பதற்காக தனியானவொரு நிறுவன கட்டமைப்பை உருவாக்க ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை (16) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

''இந்த நாட்டில் இதற்கு பின்னர் இனவாதம், சமயவாதம் உருவாவதற்கு இடமளிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி அவரின் அக்கிராசன உரையில் குறிப்பிட்டிருந்தார். ஜனாதிபதியின் அந்த யோசனையை தலைகுனிந்து மதிப்பளிப்பது மாத்திரமல்லாமல் அவரின் அறிவிப்பை இரு கைகளையும் உயர்த்தி அனுமதிக்கிறோம். பலவருடங்களுக்கு முன்னர் இருந்தே சமயவாதம், இனவாதம், பிரிவினைவாதம் போன்ற கருத்துகளை கேட்டு கேட்டு சலித்துப்போயுள்ளோம்.

எனவே, நாட்டில் உருவாகிவரும் மற்றும் உருவாகிக் கொண்டிருக்கும் இனவாதம் மற்றும் சமயவாதத்தை தோற்கடிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருந்தால் அதற்கு எங்களால் முடிந்த அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்க வேண்டும். சிங்களவர்களும் பௌத்தர்களும் இனவாதம், சமயவாதம் கொண்டவர்கள் இல்லை என்பதால் அவரின் அந்த கருத்தை நிராகரிப்பதற்கு எங்களுக்கு எந்த அவசியமும் இல்லை. எனவே, இனவாதமற்ற சூழலை உருவாக்குவதற்கு இதுவொரு சிறந்த வாய்ப்பாகும். வேறு எவருடனான ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காகவோ, ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்தை துரத்தியடிப்பதற்காகவோ பிக்குகள் செயற்பட்டதில்லை. தேசத்தை பாதுகாப்பதற்காகவே எப்போதும் பிக்குகள் செயற்பட்டுள்ளார்கள்.

இருந்தபோதும் துரதிர்ஷ்டவசமாக கடந்த காலங்களில் இந்த நாட்டை ஆட்சி செய்த அரசாங்கங்களுக்கு இனவாதம் மற்றும் சமயவாத அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட அமைப்புகள் தொடர்பில் எத்தனை கருத்துகளை முன்வைத்தாலும் அவற்றை முறையாக புரிந்துகொள்ளவோ, காதுகொடுக்காமல் செயற்பட்டதாலும் இனவாதத்தை தமது அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்திக் கொண்டமையினால் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. எது எவ்வாறாக இருந்தாலும் அது வரலாறு. அதைப் பற்றி பேசுவதில் பயனில்லை. மேற்குறிப்பிட்டதுபோன்று, ஜனாதிபதியின் கருத்தை கேட்டதும் எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி எல்லையற்றதாகும்.

பல வருடங்கள் சேகரித்த தகவல்களே எங்களிடம் இருக்கின்றன. எங்களிடமிருக்கும் ஒரு சில தகவல்கள் பாதுகாப்பு, புலனாய்வுத் துறையினரிடம் கூட இருக்காது என்பதை பொறுப்புடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தற்போதைய ஜனாதிபதி மீது எமக்கு நம்பிக்கையிருக்கிறது. அதேபோன்று, பாராளுமன்றத்தில் அவருக்கு பெரும் அதிகாரமும் கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே எந்தவொரு சட்டத்தையும் நிறைவேற்றிக்கொள்வதற்கு தடையெதுவும் இல்லை. ஞானசார தேரர் இனவாதி என்று என்னை விமர்சித்தார்கள். மீண்டும் உள்ளடக்கங்களை பேசி சிக்கல்களை உருவாக்க நாங்கள் விரும்பவில்லை. சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவது தொடர்பில் கலந்துரையாடப்படுகிறது. அது மிகவும் முக்கியமானது. அந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் எங்களிடமிருக்கும் தகவல்களை வெளிப்படையாக ஒப்படைக்க முடியும். அதற்காக தனியானவொரு நிறுவனக் கட்டமைப்பை உருவாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதில் பங்குபற்ற எங்களுக்கும் அழைப்பு விடுக்க வேண்டும். மௌலவிகளுக்கும் அழைப்பு விடுக்க முடியும். அதன்போது இந்த விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாட முடியும்.

இரகசியமாக ஒருசில செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக எங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது. அதனால், எச்சரிக்கைக்கு அப்பால் சென்று இந்த செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்காக தற்போதே நடவடிக்கை எடுக்கவேண்டும். இனவாதம் இல்லை, சமயவாதமில்லை என்று கூறிக்கொண்டாலும் இனவாதம், சமயவாதம், பிரிவினைவாதம் என்றால் என்ன என்பது தொடர்பில் அரசாங்கம் கூற முற்படுவதில்லை. எங்களிடமிருக்கும் தகவல்கள் அழிக்கப்படலாம். நாட்டின் எதிர்காலம் எவ்வாறு அமையுமென்று எங்களால் கூற முடியாது. ஒருசில இனவாத தரப்புகளிடமிருந்து ஆச்சரியமடையும் வகையிலான சில தகவல்கள் எங்களுக்கு கிடைத்த வண்ணம் இருக்கின்றன. அதனால், எங்களுக்கு கிடைக்கும் தகவல்களை விகாரைகளில் வைத்திருப்பதில் பலனில்லை. பொலிஸாருக்கு வழங்குவதிலும் பயனில்லை. எனவே, இதற்காக பாராளுமன்ற தெரிவுக்குழு அல்லது வேறு குழுவையாவது நியமிக்க வேண்டும். தேவையற்ற விடயங்களும் பாடசாலை பாடத் திட்டங்களில் உள்வாங்கப்பட்டுள்ளன. மறுபுறம், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்துக்கு பின்னணியில் இருந்த சிலரால் முன்வைக்கப்பட்ட கருத்துகளும் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. இதுபோன்ற தகவல்களை எங்களால் பெற்றுக்கொடுக்க முடியும்'' என்றார்.

## உறுதிமொழிகளை...

ஜனாதிபதி திசாநாயக்கவை இந்தியாவுக்கு நான் அன்புடன் வரவேற்கின்றேன்.

ஜனாதிபதியாக இந்தியாவுக்கு முதலாவது விஜயத்தை மேற்கொள்வதற்கு நீங்கள் மேற்கொண்ட தீர்மானம் குறித்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஜனாதிபதி திசாநாயக்க அவர்களது இந்த விஜயமானது நமது உறவுகளில் புத்துணர்ச்சியுடனான ஆற்றல்களையும் சக்தியையும் உட்புகுத்தியுள்ளது.

நமது பங்குடைமைக்கான எதிர்கால நோக்கினை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம்.

அத்துடன் நமது பொருளாதார பங்குடைமையில் முதலீட்டை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சி மற்றும் இணைப்புக்கு நாங்கள் முக்கியத்துவம் கொடுத்துள்ளோம்.

நேரடியான தொடர்புகள், டிஜிட்டல் மற்றும் ஆற்றல் அடிப்படையிலான இணைப்பு ஆகியவை எங்கள் கூட்டாண்மையின் முக்கிய தூண்களாக இருக்கவேண்டுமென நாம் தீர்மானித்துள்ளோம்.

இரு நாடுகளுக்கும் இடையிலான மின்சார வலையமைப்புக்கான இணைப்பு மற்றும் பல்பொருள் பெற்றோலிய உற்பத்திகளை விநியோகிக்கும் குழாய் கட்டமைப்பு ஆகியவற்றை ஸ்தாபிப்பதற்காகவும் நாம் பணியாற்றவுள்ளோம்.

சம்பூர் சூரியக் கல மின்சக்தி திட்டம் துரிதப்படுத்தப்படும்.

இவற்றுக்கு மேலதிகமாக இலங்கையில் உள்ள மின் உற்பத்தி நிலையங்களுக்கு LNG வழங்கப்படும்.

இருதரப்பு வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக ETCA உடன்படிக்கையை நிறைவேற்றும் முயற்சிகள் இரு தரப்பாலும் மேற்கொள்ளப்படும்.

இன்றுவரை 5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நன்கொடை மற்றும் கடனுதவி இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களுக்கும் நாங்கள் ஆதரவு வழங்கி வருகின்றோம்.எமது பங்காளி நாடுகளின் அபிவிருத்தித் தெரிவுகளுக்கு அமைவாகவே எமது திட்டங்கள் தெரிவு செய்யப்படுகின்றன.

இந்த ஆதரவைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் வகையில், மாகோ முதல் அனுராதபுரம் வரையான ரயில் பாதை சமிக்கைகள் மற்றும் காங்கேசன்துறை துறைமுக மீளமைப்புக்காக நன்கொடை அடிப்படையிலான ஆதரவை வழங்க தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் எமது கல்வி ரீதியான ஒத்துழைப்பின் அங்கமாக இலங்கையில் உள்ள கிழக்கு பல்கலைக் கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கு நாம் மாதாந்த புலமைப் பரிசில்களை வழங்கவுள்ளோம்.

அடுத்துவரும் ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் இலங்கையைச் சேர்ந்த 1500 சிவில் சேவை அதிகாரிகளுக்கு இந்தியாவில் பயிற்சிகள் வழங்கப்படும்.

வீடமைப்புத் திட்டம், புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் உட்கட்டமைப்பு சார்ந்த திட்டங்களுடன் இலங்கையின் விவசாயம் பால்பொருள் உற்பத்தி மற்றும் மீன்பிடி ஆகிய துறைகளுக்கும் இந்தியா தனது ஆதரவை வழங்கும். இலங்கையின் பிரத்தியேக டிஜிட்டல் அடையாள அட்டை திட்டத்தில் இந்தியா பங்காளராக இருக்கும்.

எமது பாதுகாப்பு ஒன்றுடனொன்று இணைக்கப்பட்டுள்ளது என்பதில் ஜனாதிபதி திசாநாயக்கவும் நானும் முழுமையான இணக்கப்பாட்டைக் கொண்டிருக்கின்றோம்.

பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையை துரிதமாக நிறைவேற்றவேண்டுமென நாம் தீர்மானித்துள்ளோம். அத்துடன் நீரியல் சார்ந்த துறைகளிலும் ஒத்துழைப்புடன் செயற்பட நாம் இணங்கியுள்ளோம். பிராந்தியத்தின் சமாதானம், பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக்கு கொழும்பு பாதுகாப்பு குழுமம் மிகவும் முக்கியமான தளம் என நாம் நம்புகின்றோம்.

இவ்வாறான குடையின் கீழ், கடல்சார் பாதுகாப்பு, பயங்கரவாத ஒழிப்பு, இணையப் பாதுகாப்பு, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் கடத்தல்களுக்கு எதிரான போராட்டங்கள், மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த நிவாரணம் ஆகிய விடயங்களிலும் ஆதரவு வழங்கப்படும்.

இந்திய - இலங்கை மக்களிடையில் காணப்படும் உறவுகள் நமது நாகரிகங்களில் வேரூன்றியவை ஆகும். பாளி மொழியை செம்மொழியாக அறிவித்த தருணத்திலும் அதனுடன் இணைந்த கொண்டாட்டங்களிலும் இலங்கையும் எம்முடன் இணைந்திருந்தது.

கப்பல் சேவைகளும் சென்னை யாழ்ப்பாண விமான இணைப்புகளும் சுற்றுலாத்துறையை மாத்திரம் மேம்படுத்தவில்லை. ஆனால் கலாசார உறவுகளையும் வலுவாக்கியுள்ளன.

நாகபட்டினம் மற்றும் காங்கேசன்துறை இடையிலான கப்பல் சேவைகள் வெற்றிகரமாக மீள ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நிலையில் இராமேஸ்வரம் மற்றும் தலைமன்னார் இடையிலான கப்பல் சேவையையும் ஆரம்பிக்க நாங்கள் கூட்டாக தீர்மானித்துள்ளோம். பௌத்த மத வளாகம் மற்றும் இலங்கையின் இராமாயணச் சுவடுகள் மூலம் சுற்றுலாத்துறையில் காணப்படும் மகத்தான ஆற்றலை உணர்ந்துகொள்வதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

நமது மீனவர்களின் வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய விவகாரங்கள் குறித்து விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த விவகாரம் தொடர்பாக மனிதாபிமான ரீதியிலான அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டுமென நாம் இருவரும் இணங்கியுள்ளோம்.

அத்துடன் இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் புனரமைப்பு குறித்தும் நாம் கலந்துரையாடியுள்ளோம்.

ஜனாதிபதி திசநாயக்க அனைவரையும் உள்ளடக்கிய தனது நோக்கு குறித்து என்னிடம் கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றுமென நாம் நம்புகின்றோம்.

அத்துடன் இலங்கை அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்தவும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்குமான தமது உறுதிமொழியை அவர்கள் நிறைவேற்ற வேண்டும்.

தேசத்தைக் கட்டியெழுப்பும் அவரது முயற்சிகளில் இந்தியா உண்மையானதும் நம்பத்தகுந்ததுமான பங்காளியாக இருக்குமென நான் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவிடம் உறுதியளித்துள்ளேன்.

ஜனாதிபதி திசநாயக்கவையும் அவரது தூதுக்குழுவினரையும் மீண்டும் ஒரு முறை அன்புடன் இந்தியாவுக்கு வரவேற்கின்றேன்.

அத்துடன் புத்தகயாவுக்கு அவர் மேற்கொள்ளும் விஜயம் சிறப்பானதாக அமைய வாழ்த்துவதுடன் அவ்விஜயமானது ஆன்மீக சக்தி மற்றும் புத்துணர்ச்சி ஆகியவற்றால் நிறைந்திருக்குமென நம்புகின்றேன்.

## அர்ச்சுனாவுக்கு...

பேஸ்புக்கில் கவனத்தை ஈர்க்க மேற்கொண்ட நடவடிக்கை சர்ச்சையாகியிருந்தது குறிப்பிடத் தக்கது.

அர்ச்சுனாவுடன் சேர்ந்து இயங்கும் யுவதியொருவர் மீதும் இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தது. அவரும் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

வழக்கு விசாரணையின்போது, வைத்தியசாலைக்குள் பணிப்பாளரின் முன் அனுமதியின்றி அத்துமீறி நுழைதல், முறைப்பாட்டாளருக்கு இடையூறு விளைவித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது என சந்தேகநபர்களுக்கு அறிவுறுத்திய நீதிவான், சந்தேக நபர்களை தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தார்.குறித்த வழக்கினை மேற்கொண்டு நடத்துவது தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனைகளை பெறுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்திய நீதவான், வழக்கினை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 07ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## பாரதத்துக்கு...

''இந்தியாவின் பாதுகாப்புக்கும் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இலங்கை மண்ணை பயன்படுத்த ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை'' என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (16) பிற்பகல் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான ஹைதராபாத் மாளிகையில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து, இரட்டை வரி விதிப்பைத் தடுப்பது மற்றும் அரசு அதிகாரிகளின் திறன் மேம்பாடு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இந்திய - இலங்கை தலைவர்கள் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டன.

இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையில் இலங்கைக்கு விசேடமான இடமுள்ளது என்பதை தாம் நன்கு அறிவதாக கூட்டுச் செய்தியாளர் சந்திப்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நினைவு கூர்ந்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தனது முதலாவது வெளிநாட்டு விஜயத்துக்காக இந்தியாவை தெரிவு செய்தமை தொடர்பில் தாம் மகிழ்ச்சியடைவதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இதன்போது தெரிவித்தார்.

எதிர்கால நோக்குடன் இருநாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை புதிய கோணத்தில் கொண்டு செல்லும் வகையில் பௌதீக, டிஜிட்டல் மற்றும் எரிசக்தி ஆகிய பிரதான தூண்களை பலப்படுத்துவதற்காக இலங்கைக்கு தொழில்நுட்ப ஆதரவை வழங்குவதும், இரு நாடுகளுக்குமிடையே மின்சார வலையமைப்பு இணைப்பு மற்றும் பால் உற்பத்தி, பெற்றோலியக் குழாய் இணைப்பை ஏற்படுத்துவது என்பன குறித்தும் இக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்திய அபிவிருத்தி ஒத்துழைப்பை தொடர்ந்து முன்னெடுக்கும் வகையில், அநுராதபுரம் ரயில் பாதை சமிக்ஞை கட்டமைப்பு மற்றும் காங்கேசன்துறை துறைமுக புனரமைப்பு என்பவற்றுக்கு உதவி வழங்குவது தொடர்பிலும் இதன் போது நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தியக் கல்வி ஒத்துழைப்பின் கீழ் அடுத்த வருடம் முதல் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு மாகாண பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கு மாதாந்த புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. அடுத்த ஐந்து வருடங்களில் 1500 இலங்கை அரச ஊழியர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்க இந்தியப் பிரதமர் உடன்பாடு தெரிவித்தார்.

அத்தோடு வீடமைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் உள்கட்டமைப்பு, இலங்கையில் விவசாயத்துறை, பால் உற்பத்தித்துறை மற்றும் கடற்றொழிற்துறை முன்னேற்றம் என்பவற்றுக்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்கும்.

இந்தியாவின் பாதுகாப்புக்கும் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இலங்கை மண்ணை பயன்படுத்த ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இங்கு தெரிவித்தார்.

"இரு நாடுகளுக்கும் மிகப்பெரிய சிக்கலாக மாறியுள்ள மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர மற்றும் நிலையான தீர்வைக் காண விரும்புகிறோம். அந்த பகுதியில் உள்ள மீனவர்களால் இழுவைப் படகுகள் மூலம் மீன்பிடிக்கும் முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. அது இத்தொழிலுக்கு அழிவை ஏற்படுத்தும் என்பதால் அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்" என்றார் அநுர.

கடந்த 02 ஆண்டுகளுக்கு முன்பு வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியை இலங்கை சந்தித்தபோது, அதிலிருந்து மீண்டு வர இந்தியா எங்களுக்கு பெரும் ஆதரவை வழங்கியது என்றும் அநுரகுமார தெரிவித்தார்.

பாதுகாப்பு ஒத்துழைப்பின் (Colombo Security Conclave)கீழ் கடல்சார் பாதுகாப்பு, பயங்கரவாத ஒழிப்பு, இணையப் பாதுகாப்பு, கடத்தல் மற்றும் திட்டமிடப்பட்ட குற்றங்களுக்கு எதிராக போராடுதல், மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த நிவாரணம் போன்ற விடயங்களில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பகல்போசன விருந்து வழங்கினார்.

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அழைப்பு விடுத்தார்.

## அநுர அரசுக்கு...

என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவுமான கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை (16) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

''ஆட்சிக்கு வந்து 24 மணிநேரத்தில் ஒரே நேரத்தில் நிவாரணம் வழங்குவோம் என்று கூறிய விடயங்களை இந்த அரசாங்கம் மறந்துவிட்டது போன்றே தெரிகிறது. அரிசி மோசடியை நிறைவுக்கு கொண்டுவர ஆட்சிப்பலத்தை தருமாறே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் கோரியிருந்தது. ஆனால் தற்போது நாட்டில் அரிசிக்கான பிரச்சினை இருக்கின்றபோதும், மக்களுக்கு நிவாரணம் கிடைத்தது போன்று தெரியவில்லை.

வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் எதற்கு என்று வினவியவர்கள் இன்று மாற்றுக் கருத்துக்களை முன்வைத்து வருகிறார்கள். புத்தாக்க அரசாங்கமொன்றை அமைப்பதற்கே இந்த அரசாங்கம் ஆட்சியை பொறுப்பேற்றது. ஆனால், இறுதியில் அரிசிக்கும் தேங்காய்க்கும் மக்கள் வரிசையில் காத்திருக்கும் நிலைமையே ஏற்பட்டுள்ளது.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது 100 - 110 ரூபாவுக்கு விற்பனையான தேங்காய் இன்று 200 ரூபா வரையில் விற்பனையாகிறது. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரு மாதங்களில் குரங்குகளின் எண்ணிக்கை எவ்வாறு இலட்சக்கணக்காக அதிகரித்தது என்பதும் பிரச்சினைக்குரிய விடயமாகும். இந்த அரசாங்கத்துக்கு முகாமைத்துவ ரீதியான இயலாமை ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரிகிறது.

வெளிநாடுகளில் மறைத்து வைக்கப்பட்டுள்ள பணத்தை நாட்டுக்கு கொண்டுவர போவதாகவே தேர்தல் காலத்தில் தொடர்ந்தும் கூறி வந்தார்கள். ஆனால், இன்று வெளிநாட்டில் பெற்றுக்கொண்ட பட்டப்படிப்புக்கான சான்றிதழைக் கூட நாட்டுக்கு கொண்டுவர முடியாத நிலைமை இந்த அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது. மின் கட்டணம் முதற்கொண்டு மக்களின் அத்தியாவசிய சேவைகள் குறித்து இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் வழங்கிய வாக்குறுதிகளை ஏமாற்றமடைந்து வாக்களித்த மக்களின் எதிர்பார்ப்புகள் தவிடுபொடியாக்கப்பட்டுள்ளன.

மின் கட்டணத்தில் நிவாரணம் கிடைக்குமென்று மக்கள் எதிர்பார்த்திருந்தாலும் அந்த எதிர்பார்ப்பு கனவாக்கப்பட்டுள்ளது. தேசிய மக்கள் சக்தி முன்னர் கூறியதுபோன்று எரிபொருளுக்கான வரிகுறைப்போ, மோசடி நிறைந்த எரிபொருள் விலை சூத்திரமோ இன்னும் மாற்றியமைக்கப்படவில்லை. அன்று இவர்கள் கூறிய மோசடி நிறைந்த எரிபொருள் விலை சூத்திரமும் வரி முறையும் இன்னும் ஏன் நடைமுறையில் இருக்கிறது என்பதற்கு அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும். தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை இந்த அரசாங்கம் உடனடியாக நடைமுறைப்படுத்திக் காட்ட வேண்டும்'' என்றார்.

## தினசரி பலாபலன்கள்

### குரோதி வருடம் மார்கழி மாதம் 02ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**மேஷம்** எதிர்பாராத வகையில் நண்பர் ஒருவரின் உதவி கிடைக்கும். மனத்துணிவுடன் காரியம் சாதிப்பீர்கள்.

**ரிஷபம்** பணக் கொடுக்கல் வாங்கலிலிருந்து வந்த பிரச்சினை தீரும். குடும்பத்தின் மகிழ்ச்சிக்காக எல்லை மீறிச் செலவு செய்வீர்கள்.

**மிதுனம்** உங்கள் புகழ்,செல்வாக்கு உச்சத்தை தொடப்போகின்றது. தடைப்பட்டிருந்த சுப காரியங்கள் இனிதே நடந்தேறும்.

**கடகம்** தொழில் நிமித்தம் அலைச்சலும் உடல் அசதியும் உண்டு. வெளிநாட்டு நன்மைகள் இலாபங்கள் உண்டு.

**சிம்மம்** எதிர்பாராத தன அதிர்ஷ்டம் உண்டு. தொழில், வியாபாரத்தில் நீங்கள் தான் இன்றைய சாதனையாளர்.

**கன்னி** நீங்கள் நீண்ட நாள் திட்டமிட்ட காரியம் இன்று பலனளிக்கப்போகின்றது. தொழிலில் ஈடேற்றம் உண்டு.

**துலாம்** நீண்ட நாள் உங்கள் கனவை இன்று நனவாக்குவீர்கள். ஆன்மீக சிந்தனைகளை வளர்த்துக்கொள்வீர்கள்.

**விருச்சிகம்** கவனக்குறையுடன் செயலாற்றினால் குறை கேட்க நேரிடும். மனதில் தேவையற்ற எண்ணங்கள் அலை மோதும்.

**தனுசு** நீங்கள் விரும்பியவரை மணக்க பெற்றோர் சம்மதம் தெரிவிப்பர். கூட்டு முயற்சிகளில் ஓரளவு இலாபங்களைப் பெறுவீர்கள்.

**மகரம்** பழைய கடனை அடைப்பதற்கு புதுக் கடன் தொகை பெறுவீர்கள். சிரித்துச் சிரித்து கழுத்தறுக்கும் நபர்களிடம் எச்சரிக்கை வேண்டும்.

**கும்பம்** தொழில் ரீதியிலிருந்து வந்த சிக்கல்கள் தீர்ந்து நிம்மதியடைவீர்கள். புதிய புதிய திட்டங்களால் வெற்றியடைவீர்கள்.

**மீனம்** வீடு மற்றும் வாகனம் இவற்றால் இலாபங்களை அடைவீர்கள். தாய், தாய் வழி உறவுகளின் உதவிகளால் மகிழ்ச்சியடைவீர்கள்.

| | |
|---|---|
| **திதி** | : துவிதியை மு.ப.10.56 வரை பின் திருதியை |
| **நட்சத்திரம்** | : புனர்பூசம் பி.இ.12.44 வரை பின் பூசம் |
| **பிறை** | : தேய்பிறை |
| **யோகம்** | : அமிர்த யோகம் பி.இ.12.44 வரை பின் சித்த யோகம் |
| **வார சூலை** | : வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது. |
| **நல்ல நேரம்** | : காலை-8.15 – 9.15 மணி வரை பகல் - 12.15 – 1.15 மணி வரை மாலை- 4.45 – 6.45 மணி வரை |
| **ராகு காலம்** | : 3.45 – 4.45 மணி வரை |
| **எமகண்டம்** | : 9.15 – 10.45 மணி வரை |
| **குளிகை** | : 12.15 – 1.45 மணி வரை |
| **சந்திராஷ்டமம்** | : விருச்சிக-தனுசு ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும். (முன்னிரவு 6.47 வரை விருச்சிக ராசியினருக்கு) |

#### அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்

**இன்று பின்னிரவு 12.44 மணி வரை**
பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி

**இன்று பின்னிரவு 12.44 மணிக்கு மேல்**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு, தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், போட்டி, தேர்வுகளில் வெற்றி, தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.

**விஷேட தினம்** : ------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325 078-6759739

# இந்திய உப ஜனாதிபதியை சந்தித்தார் அநுர







ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் இந்திய உப ஜனாதிபதி ஜக்தீப் தன்கருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (16) பிற்பகல் நடைபெற்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் கிடைத்த பெரு வெற்றிக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு இந்திய உப ஜனாதிபதி வாழ்த்துகளை தெரிவித்தார்.

பொருளாதார ஒத்துழைப்பு, விவசாயம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் போன்ற விடயங்கள் குறித்து இதன்போது ஆராயப்பட்டன.

அதனைத் தொடர்ந்து இந்திய சுகாதார அமைச்சரும் பாரதீய ஜனதா கட்சியின் தலைவருமான ஜகத் பிரகாஷ் நட்டாவுக்கும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# வலம்புரிச் சங்குகளுடன் இருவர் கைது



*அநுராதபுரம் நிருபர்*

அநுராதபுரம், விகாரஹல்மில்லகுளம, விஹாரபாளுகம பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது விற்பனை செய்வதற்கு தயார்படுத்தி வைத்திருந்த வலம்புரிச் சங்குகள் மூன்றைக் கைப்பற்றியதுடன், சந்தேகநபர்கள் இருவரையும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

விகாரஹல்மில்லகுளம, விஹாரபாளுகம பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று (16) காலை விசேட பொலிஸ் அதிரடிப்படையின் அநுராதபுரம் முகாம் அதிகாரிகளும் கறுவலகஸ்வெவ வன ஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளும் இணைந்து நடத்திய சுற்றிவளைப்பின்போதே வலம்புரிச் சங்குகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்கள் 27, 49 வயதுகளையுடைய விஹாரபாளுகம, அநுராதபுரம் பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

புலனாய்வுத் தகவல் மூலம் புத்தளம், கறுவலகஸ்வெவ வன ஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய விசேட பொலிஸ் அதிரடிப்படையின் கட்டளைத் தளபதி சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் வருண் ஜயசுந்தரவின் உத்தரவு மற்றும் ஆலோசனைக்கமைவாக அநுராதபுரம் விஷேட அதிரடிப்படை முகாம் கட்டளை அதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் டீ.ஜே.எஸ்.பீ.குணசேகர உள்ளிட்ட அதிகாரிகளினால் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்க தாகும்.

மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளும் நோக்கில் சந்தேகநபர்கள் இருவரையும் வலம்புரிச் சங்குகளையும் வன ஜீவராசிகள் திணைக்கள அநுராதபுரம் வலய அலுவலகத்தில் விசேட பொலிஸ் அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

# புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்

## விண்ணப்ப இறுதித் திகதி டிசம்பர் 31

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவுசெய்து வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்கான விண்ணப்பங்களை ஏற்கும் நடவடிக்கை நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2024 டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் அதன் இறுதித் திகதி முடிவடையுமென்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

அத்துடன், புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு இந்தப் புலமைப்பரிசில் வழங்கப்படுவது குறித்து பாடசாலை மட்டத்தில் அறிவுறுத்துவதற்கு அதிபர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்றும் பணியகம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை நிகழ்நிலை ஊடாக விண்ணப்பிக்க முடியும். தகுதியுடைய பிள்ளைகள் www.slbfe.lk என்ற இணையதளத்துக்குச் சென்று பெறுமதியான இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அதற்காக விண்ணப்பிக்குமாறு பணியகம் கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 011 2365471 என்ற இலக்கத்துக்கு அழைப்பதன் மூலமோ அல்லது www.slbfe.lk என்ற பணியகத்தின் இணையதளத்துக்குச் செல்வதன் மூலமோ பெற்றுக்கொள்ள முடியுமென்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் மரம் முறிந்து வீழ்ந்ததில் அரச விடுதி - வர்த்தக நிலையம் சேதம்





*சிவகுமார் திவியா*

வவுனியா, ரயில் நிலையம் முன்பாக நின்ற பழைமையான மரம் கடும் காற்று வீசியதால் முறிந்து விழுந்ததில் அரச விடுதியொன்றும் வர்த்தக நிலையமொன்றும் சேதமடைந்துள்ளன.

நேற்று (16) மதியம் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவில் மீண்டும் அவ்வப்போது கனமழை பெய்து வருவதுடன், காற்றும் வீசி வருகின்றது. மதியம் வீசிய காற்று காரணமாக வவுனியா ரயில் நிலையம் முன்பாக நின்ற பழைமையான பாரிய மரமொன்று முறிந்து விழுந்துள்ளது. இதன்போது மற்றுமொரு மரக் கிளை மீது குறித்த மரம் முறிந்து விழுந்ததால் அந்த மரமும் முறிந்து விழுந்துள்ளது. இதனால் அருகிலிருந்த அரச விடுதியின் கூரைப் பகுதி சேதமடைந்துள்ளதுடன், வர்த்தக நிலையமொன்றின் கூரை மற்றும் சுவர் பகுதி என்பனவும் உடைந்து சேதமடைந்துள்ளன. அத்துடன், மின்சார இணைப்பும் துண்டிக்கப்பட்டுள்ளது.

# செல்பி எடுக்கச் சென்றவர் ரயிலில் மோதி காயம்

*ராமு தனராஜா*

செல்பி புகைப்படம் எடுப்பதற்காக ரயிலுக்கு முன்னால் சென்ற நபர் ரயிலில் மோதுண்டு பலத்த காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக எல்ல பொலிஸார் தெரிவித்தனர். எல்ல ஒன்பது வளைவு ரயில் பாலத்துக்கு முன் ரயில் வந்துகொண்டிருந்த வேளையில் தனது கையடக்கத் தொலைபேசியினால் செல்பி எடுக்க முற்பட்ட இளைஞரொருவர் நேற்று முன்தினம் (15) ரயிலில் மோதுண்டு பலத்த காயமடைந்த நிலையில், தெமோதர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலன்னாவை பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரொருவரே இவ்வாறு காயங்களுக்குட்பட்டவராவார்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2024 டிசம்பர் 17ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# கவனிக்க வேண்டும் அரசு!

அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் செப்டெம்பர் மாதம் மாகாண சபைத் தேர்தலையும் நடத்த அரசு திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார இந்தியாவிடம் தெரிவித்த செய்திகள் வெளிவந்துள்ளன.

இது தொடர்பான சட்ட நடவடிக்கைகளை விரைந்து முடிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருவதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டு நிலுவையிலிருக்கும் வேட்புமனுக்களை சட்டரீதியாக இரத்துச் செய்கின்றமை தொடர்பான சட்டதிருத்தங்கள் அடுத்த சில வாரங்களில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் தாக்கல் செய்யப்பட்டு தேர்தல்கள் நடத்தப்படாமல் நிலுவையிலிருக்கும் அந்த வேட்புமனுக்களை இரத்துச் செய்தால் மட்டுமே புதிதாக வேட்புமனுக் கோரி அந்தத் தேர்தல்களை ஆரம்பத்திலிருந்து நடத்த முடியும்.

அதற்காக உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் வேட்புமனுக்களை இரத்துச் செய்வது தொடர்பான சட்டங்களைத் திருத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கான பணிகளை சட்ட வரைவுத்துறை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழைய வேட்புமனுக்களை இரத்துச் செய்து, புதிதாக வேட்புமனுக்களை ஏற்று இந்தத் தேர்தலை நடத்தினால் 2022 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுவரையான காலத்தில் புதிதாகப் பதிவுசெய்யப்பட்ட 10 இலட்சம் இளம் வாக்காளர்களும் இந்தத் தேர்தலில் வாக்களிக்க முடியுமென்று அந்த அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

340 உள்ளூராட்சி மன்றங்களுக்கான 8,711 வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதற்காகக் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்புமனுக்கள் கோரப்பட்டன.

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 8,672 வேட்பாளர்கள், 24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 275 பிரதேச சபைகளின் உறுப்பினர் பதவிகளுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தனர். அவர்களில் சுமார் மூவாயிரம் அரச ஊழியர்களும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வேட்புமனுக்களை சமர்ப்பித்த இந்த வேட்பாளர்கள் சுமார் எட்டாயிரத்து அறுநூறு பேரில் பலர் உயிரிழந்துள்ளமையுடன் சிலர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அதேசமயம், தேர்தல் கூட்டணித் தரப்புகள் அணி மாறியுள்ளது. வேட்பாளர்கள் கூட கட்சி, அணி, கூட்டு மாறி நிற்கின்றனர்.

இதன் காரணமாக பழைய வேட்பு மனுக்களை இரத்துச் செய்து, புதிதாக வேட்பு மனுக்களைக் கோரிப் பெற்று அவற்றினடிப்படையில் தேர்தலை நடத்துவதுதான் சரியானதும் ஒழுங்கானதுமாக இருக்க முடியும்.

ஆனால், நிலுவையிலுள்ள பழைய தேர்தலை விரைந்து நடத்தி முடிக்கும்படி உயர்நீதிமன்ற உத்தரவொன்று இருக்கையில், அதை நிறுத்தி, மாற்றாக, புதிதாக வேட்புமனுக்களைக் கோரிப் பெற்று அவற்றின் அடிப்படையில் தேர்தலை நடத்துவதாயின் இவ்விடயத்தில் உத்தரவொன்றை - தீர்ப்பொன்றை - வழங்கியுள்ள உயர்நீதிமன்றுக்கு அறிவித்து அதன் அனுமதியோடு இந்த விடயத்தை முன்னெடுப்பதுதான் சட்டப்படி ஒழுங்கான முறைமையாக இருக்க முடியும்.

நிலுவையிலுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் - 2023 ஐ கிடைக்கும் அடுத்த வாய்ப்பில் விரைந்து நடத்தும்படி, உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கையில், அதற்கு மாறான நடவடிக்கைகளை - அந்த நடவடிக்கைகள் நடைமுறை சார்ந்த வகையில் நீதி, நியாயமானவையாக இருந்தாலும் - அவற்றை முன்னெடுப்பதற்கு முன்னர் நீதிமன்றுக்கு அறிவித்து, அதற்கான அனுமதியையும் இணக்கத்தையும் நீதிமன்றத்திடம் பெற்றுக் கொள்வதே ஒழுங்கு முறையான செயற்பாடாக இருக்க முடியும்.

அதைச் செய்யாமல், ஆளும் தரப்பு இவ்விடயத்தில் ஒருதலைப்பட்சமாக செயற்பட முனைவது நீதி முறைமைக்கு மாறான போக்காகும்.

மாகாண சபைத் தேர்தலைப் பொறுத்தவரை அத்தனையையும் கிரமமாக நடத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது அரசு. நேற்று ஜனாதிபதி அநுரவுடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி , மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். இதனையும் இலங்கை அரசு கவனத்திற்கொண்டு செயற்படுவது நல்லது.

# மானத்தோடு வாழ்வதுதான் மரியாதை!



சுயமரியாதை தவறாத வாழ்வு வாழக் காத்திருக்கும் வாசகப்பெருமக்களே! வணக்கம்.

ஒருவரைப் பார்த்து, இவர் மனிதராக வாழ்வதற்குரிய அனைத்துத் தகுதிகளையும் பெற்றிருக்கிறாரென்றால், அவரைத் தமிழின் உயர்ந்த சொல்லான ‘தக்கார்’ என்கிற மதிப்புடைய சொல்லைச் சொல்லிப் பாராட்டலாம். அதே சமயத்தில், தகுதிக்குரிய எந்தக் குணத்தையும் பெற்றிருக்காதவரைத், ‘தகவிலார்’ என்கிற சொல்லால் சொல்லிக் கீழ்மைப்படுத்தலாம்.

“தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்”

என்பது வள்ளுவப் பேராசான் மனித வகைமைகளைத் தகுதி அடிப்படையில் பகுத்துக் காட்டும் பாகுபாடாகும். ஒவ்வொரு மனிதரும் தமது எண்ணங்களாலும் செயல்களாலும் தம்மை ஒழுக்க நிலைகளில் தகுதிப்படுத்திக்கொண்டே இருக்க வேண்டும். இத்தகுதிப்பாடுகளால் தம்மைத் தகவமைத்துக்கொண்டே இருப்பவர் தக்கார்; இல்லாதவர் தகவிலார் ஆவர்.

ஒவ்வொரு மனிதரும் தாம் கடைப்பிடிக்கும் ஒழுக்க நெறிகளாலேயே உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றப்படுகின்றனர். ஒழுக்கமே உயர்ந்த மதிப்பையும் மரியாதையையும் பெற்றுத் தருவதால், ஒழுக்க வாழ்வை உயிரைப் பாதுகாப்பதுபோலப் போற்றிக் கடைப்பிடிக்க வேண்டும். “புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்” என்னும் புறநானூற்றுச் சிந்தனை, எந்த நிலையிலும் தனது புகழுக்கும் பெருமைக்கும் ஒரு சிறு களங்கமும் வந்துவிடக்கூடாது; மீறி வந்துவிட்டால் உயிரையும் இழந்துவிடத் தயங்கக் கூடாது என்பதை வலியுறுத்துகிறது.

மானம் என்பது கண்களுக்குப் புலப்படாத ஒழுக்கக் கோட்பாடுகளால் மெலிதான வலைப்பின்னல்போல உயிரைச் சூழ்ந்து நின்று பாதுகாப்புத் தருவது. உயிர் குடியிருக்க உடம்பு உதவுவது போல, உயிரைப் பாதுகாக்க மான உணர்வு மகத்தான பாதுகாப்பாக உறுதியுடன் நிற்கிறது. தன்மானம் என்பது ஒவ்வொரு மனிதரும் தமதான செயற்கரிய செயல்களால் தம்மை உருவாக்கி நிற்பது. தன்மரியாதை, தற்கட்டுப்பாடு, சுய ஒழுக்கம், தன்மானம் போன்றவைகளெல்லாம் தனிமனித ஒழுக்கங்களால் ஒருவரைச் சுற்றி எழுப்பப்படும் கொள்கை அடையாள உணர்வுக் கோட்டைச் சுவர்கள் போன்றவையாகும். சுயமரியாதை நிரம்பிய மனிதர் என்பவர் எந்த இடத்திலும் தனக்குரிய மரியாதைக்கு இம்மியளவும் பங்கம் வராமல் பெருமிதத்தோடு செயற்படுபவர்கள் ஆவர்.

தன்மானம் என்பதும் சுயமரியாதை என்பதும் ஒரே நாளில் வந்து ஒட்டிக்கொள்பவை அல்ல; காலா காலமாக நன்மதிப்புடன்கூடிய ஒழுக்கங்களால் அவர்கள் ஈட்டிய சொத்துகளாக அவை திகழ்கின்றன. குடிப்பெருமை, இனப்பெருமை என்று மரபு ரீதியாக வருகின்ற பெருமைகளாலும் அவை பொலிவு கொள்கின்றன. காலச்சுழற்சியில்,பணம், செல்வம், அதிகாரம், செல்வாக்கு, நிலபுலன்கள் போன்ற நிலையற்ற விஷயங்களால் ஒரு மனிதர் திடீரென மேனிலைக்கு வரலாம்; அல்லது அதலபாதாளத்துக்குத் தள்ளப்பட்டுக் கீழ்நிலைக்கும் போகலாம். ஆனாலும், எப்பேர்ப்பட்ட இக்கட்டுநிலை வந்தாலும் ஒவ்வொரு மனிதரும் தனது சுயமரியாதைக்கும் தன்மானத்துக்கும் இழுக்கு நேர்ந்துவிடாமல் வாழ்க்கையைச் செம்மையாக நடத்த வேண்டும்.

“தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை”

இந்தத் திருக்குறளில் திருவள்ளுவர், மனிதன் எவ்வளவு இக்கட்டு வந்தாலும் தன்னிலை தாழக்கூடாது என்பதை வலியுறுத்துகிறார். அதே வேளை, வறுமை என்னை இந்த நிலைக்குத் தள்ளிவிட்டது; வாழ்வியல் துன்பங்கள் என்னை இந்தக் கீழ்நிலைக்குத் தள்ளிவிட்டன என்று தன்மானம் தவறி, சுயமரியாதை இழந்து நிற்பவர்களைத் தலையிலிருந்து உதிர்ந்த மயிருக்குச் சமமானவர்கள் என்று கீழ்மைப்படுத்துகிறார். தலைமுடிக்குப் பெருமையெல்லாம் தலையில் அது இருக்கும் வரைதான்; அதுபோல, மனிதர்க்குப் பெருமையெல்லாம் தனது சுயமரியாதையிலிருந்து சற்றும் நழுவாத வரைக்கும் தான்.

தலைமுடி தலையில் இருக்கின்ற வரை அதனை வளர்ப்பதற்கும் பேணிப் பாதுகாப்பதற்கும் நாம் அதற்குச் செய்கின்ற உபசாரங்கள் எண்ணில் அடங்காதவை. நவீன அங்காடிகளுக்குச் சென்றால், தலைமுடிக்காக வந்துள்ள எண்ணெய் வகைகள், ஷாம்பு வகைகள், சீயாக்காய் வகைகள், கிரீம் வகைகள், தலைமுடிச்சாய வகைகள், பின்னல் அலங்கார வகைகள் எத்தனை எத்தனை என்று சட்டென்று கணக்குப்போட்டுச் சொல்லிவிட முடியாது. அழகு நிலையங்களுக்குச் சென்றாலும் அதனை வெட்டுவதற்கும் செதுக்குவதற்கும் நீட்டிவிடுவதற்கும் பரப்பிப் பறக்க விடுவதற்கும் என்று அழகுக்கலை நிபுணர்கள் இதற்காகவே படித்துவிட்டு நிறைய இருக்கிறார்கள்.

இவை அத்தனையும் தலைமுடிக்கு நாம் செலவழித்துச் செலுத்துகிற மரியாதை மதிப்புகள். ஆனால், அதே தலைமுடியில் ஒன்று நம் தலையிலிருந்து உதிர்ந்து நாம் சாப்பிடும்போது நம் தட்டிலோ இலையிலோ குழம்பிலோ விழுந்துவிட்டால் அவ்வளவுதான். அத்தனையையும் குப்பைத் தொட்டியில் கொட்டிவிடுவோம். தலையில் இருக்கும்வரை மதித்துப் போற்றப்படக்கூடிய தலைமுடி, உதிர்ந்து விட்டால் அருவருப்புப் பொருளாக மாறிவிடுகிற பரிதாபம் நிகழ்ந்து விடுகிறது.

அதைப்போலத்தான் சுயமரியாதையோடும் தன்மானத்தோடும் வாழும்வரைதான் மனிதனுக்கு மதிப்பும் மரியாதையும். அந்த நிலையிலிருந்து சற்றுக் குறைந்துபோக நேரிட்டாலும் தலையின் இழிந்த மயிரின் நிலை ஏற்பட்டுப்போகும். அவமான நிலை உண்டாகி, மானமிழக்கும் மதிகெட்ட நிலை உண்டாகிப் போகும். தன்நிலை தாழாமையே எந்நிலைக்கும் உயர்வுதரும் தாரக மந்திரம்.

ஒரு கதை. அமெரிக்காவில் பூனைகளுக்கான சர்வதேச குத்துச்சண்டைப் போட்டி நடைபெற்றது. இந்தியா, இலங்கை, ரஷ்யா, சீனா, பாகிஸ்தான் ஆபிரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் பலவற்றிலுமிருந்து விதம்விதமான பூனைகள் கலந்துகொண்டன. இவற்றில் குறிப்பாக, அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளிலிருந்து வந்திருந்த பூனைகள் நல்ல கொழுகொழுவென நாய்களின் உயரத்துக்கு வளர்த்தியாய் இருந்தன. அமெரிக்காவின் பூனையோ நடையிலும் பார்வையிலும் தான் திடகாத்திரமாக இருக்கிறேன் என்கிற கர்வத்தோடு மேடையில் காட்டிக்கொண்டது. அதற்கு நாள்தோறும் பால் முட்டை தவிர, மீன், இறைச்சியும் ஆட்டிறைச்சியும் போட்டு வளர்க்கப்பட்டுள்ளதாக அங்கு வந்திருந்த அமெரிக்கப் பார்வையாளர்கள் பேசிக்கொண்டனர்.

பூனைகளின் குத்துச்சண்டைப் போட்டி ஆரம்பமானது. போட்டி தொடங்கியதிலிருந்தே தன்னுடன் மோதவந்த எல்லாப் பூனைகளையும் அமெரிக்கப் பூனை வென்றுகொண்டே வந்தது. மேடையில் நிறைவாக அமெரிக்கப் பூனையுடன் மோதப்போகும் பூனை யார்? என்று பார்வையாளர்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தபோது அந்த அறிவிப்பு வந்தது. சோமாலியா நாட்டைச் சேர்ந்த பூனைதான் இறுதிப் போட்டியாளர்.

ஏற்கனவே எல்லா நாட்டுப் பூனைகளையும் வென்றுவிட்ட ஆணவத்தோடு அமெரிக்கப் பூனை நின்றிருந்தது. சோமாலியா பஞ்சத்துக்குப் பெயர்போன நாடு; அந்த நாட்டிலிருந்து வந்துள்ள பூனைமட்டும் என்ன கொழு கொழுவெனவா இருக்கப் போகிறது? வத்தலும் தொத்தலுமாக நோஞ்சானாகவே தட்டுத்தடுமாறிக் கால்களை எடுத்து வைத்து மேடைக்கு வந்தது. ஏளனமாகப் பார்த்த அமெரிக்கப் பூனை ஓர் அசைவுமின்றி நின்றிருந்தது. மேடையில் ஏறியதும் சோமாலியப்பூனை, அமெரிக்கப் பூனைமீது ஒரே பாயச்சலில் பாய்ந்து, ஓங்கி ஒரு குத்து விட்டது. அவ்வளவுதான் தலை கிறுகிறுவெனச் சுற்றித் தரையில் மயங்கி விழுந்து விட்டது அமெரிக்கப்பூனை.

அமெரிக்கப்பூனை கிறக்கம் தெளிந்து தலையைத் தூக்கிப் பார்க்கும்போது தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டிருந்தது சோமாலியப் பூனை. அதன் காதருகில் சென்று, மெதுவாகக் கேட்டது அமெரிக்கப் பூனை,‘‘இது எப்படி நடந்தது?”

உடனே சோமாலியப் பூனை பதிலளித்தது, “ நான் பூனை அல்லடா; புலி!. பஞ்சத்தில் அடிபட்டு நோஞ்சானாகிப் போனாலும் புலி புலிதான்; அதேவேளை, பாலும் மீனும் சாப்பிட்டுக் கொழு கொழுவென்று வளர்ந்திருந்தாலும் பூனை பூனைதான்; நீ புலியாகிவிடமுடியாது ’’- என்று கர்ஜித்தது. ஆம்! எவ்வளவு பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டாலும் புலி புலியாகவே தன்நிலை தாளாமல் சுயமதிப்போடு இருந்தால் புலியின் வெற்றி எப்போதும் உறுதிசெய்யப்பட்டதாகவே இருக்கும்.

வாழ்வியல் பாடமும் இப்படிப்பட்டதாகவே இருக்கவேண்டும். பொருளாதாரப் பின்னடைவுகளோ உடல்நலக் குறைபாடுகளோ அதிகார ஏற்றத் தாழ்வுகளோ ஏற்பட்டுவிட்டாலும், தன்னுடைய தன்மானத்துக்கு எந்த நிலையிலும் தாழ்வு நேர்ந்துவிடாமல் நடந்துகொள்ள வேண்டும்.

சுயமரியாதை என்பது நம்முடைய நடத்தை, நம்முடைய எண்ணம், நம்முடைய செயல் எல்லாவற்றிலும் முதலில் நாம் நம்பிக்கையுள்ளவர்களாக இருப்பது. நாம் நேர்மையாக இருக்கிறோம் என்பதில் ஆழமான நம்பிக்கை கொண்டிருந்தால் போதும், வேறு யாருக்காகவும் வேறு எச்சூழலுக்காகவும் நாம் நம்நிலை தாழாமல் தன்மானத்தோடு வாழ்ந்து காட்டலாம்.

நாம் நமக்கு நாமே வகுத்துக்கொண்டு வாழ்கின்ற கோட்பாடுகளாலேயே நம்மை மற்றவர்கள் மதிக்கக்கூடிய அளவுக்கு நமது செல்வாக்கு உயர்ந்து போகும். நாம் யார், நமது எண்ணங்களின் உயரம் என்ன என்பதை உண்மையாக உணரத் தொடங்கிவிட்டால் போதும்; நாம் சுயமரியாதைக் காரர்களாக நெஞ்சை நிமிர்த்தி இந்தச் சமூகத்தில் உலா வரமுடியும்.

ஒரு சாதாரண வழக்கறிஞராகத்தான் தென்னாபிரிக்க ரயிலொன்றில் உரிய முதல் வகுப்புப் பயணச் சீட்டுடன் பயணம் செய்துகொண்டிருந்தார் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி. ஆனால், அவர் கறுப்பாக இருப்பதனால் உரிய பயணச்சீட்டு வைத்திருந்தாலும் வெள்ளையர்கள் மட்டுமே பயணம் செய்யக்கூடிய அந்த முதல் வகுப்புப் பெட்டியில் பயணிக்கத் தகுதியற்றவர் என்று ரயிலதிகாரி ஒருவரால் தள்ளிவிடப்படுகிறார் பீட்டர்ஸ்மாரீஸ்பர்க். ரயில் நிலையத்தில் நிகழ்ந்த இந்தக் கொடுஞ் செயல் தனது சுயமரியாதைக்கு இழுக்கான செயலென்று உணர்ந்து உடனே சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபடத் தொடங்குகிறார். அந்த நொடியிலேயே மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்கிற சாதாரண மனிதர் மறைந்து, மகாத்மா காந்தி என்கிற மாமனிதர் பிறப்பெடுத்து விடுகிறார். காந்தியடிகளின் சுயமரியாதைச் சிந்தனை அவரை மகாத்மா காந்தியாக உயர்த்திக் காட்டியது.

ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு நொடியும் தம்மைப் புடம்போட்டுக்கொண்டே இருக்க வேண்டும். அன்றாடம் நிகழும் வேலைப் பளுக்களிலிருந்தும் துயர நேர்வுகளிலிருந்தும் விடுபட்டு நமக்குள் நாமே நம்மை மதிக்கவும் அன்பில் நம்மை நேசிக்கவும் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும். மனச்சாட்சியின் துணைகொண்டு நம்மை உள்முகமாகத் தேடினால் நமது நேர்மையும் அன்புகனிந்த கருணையும் பளிச்செனப் புலப்பட வேண்டும். நம்முடைய பெருமைகளால் முதலில் நமக்குநாமே பெருமிதம் மிக்கவர்களாக மாறவேண்டும். இது தற்பெருமை அல்ல, சுயமாக மதிக்கின்ற சுய மரியாதை.

சுய ஒழுக்கத்திலும் சுயகட்டுப்பாட்டிலும் சுய நேர்மையிலும் அக்கறை கொண்டு அவற்றின் மீது தளராத நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் எந்த நாளிலும் எந்த நிலையிலும் தன்மானம் இழக்காத சுயமரியாதைக்காரர்களாக மிளிரவே செய்வார்கள்.

**சுந்தர ஆவுடையப்பன்**
**நன்றி - மாலைமலர்**

# இன்றைய நாளில்...

- **1903 – ரைட் சகோதரர்கள் அமெரிக்காவின் வடக்கு கரொலைனாவில் முதன்முதலில் பன்னிரெண்டு விநாடிகள் எஞ்சின் உந்தும் ரைட் பிளையர் ஊர்தியில் பறந்தனர்.**
- **1907 – யூஜியன் வாங்சுக் பூட்டானின் முதலாவது மன்னராக முடிசூடினார்.**
- **1947 – இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.**
- **1989 – 25 ஆண்டுகளின் பின்னர் பிரேசிலில் முதலாவது பொதுத்தேர்தல் இடம்பெற்றது.**
- **2014 – ஐக்கிய அமெரிக்காவும் கியூபாவும் 1960ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதற்றடவையாக தூதரக உறவைப் புதுப்பித்துக்கொண்டன.**

# நக்கல் நமசிவாயம்

**இந்தியாவில இருந்து வந்த பிறகு சீனாவுக்கும் போறார்**



# கோணப்பிட்டிய தொழிலாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வு

## ஜீவன் எம்.பி. நடவடிக்கை





மத்துரட்ட பெருந்தோட்ட நிறுவனத்துக்குட்பட்ட கோணப்பிட்டிய தோட்ட மக்கள் இதுவரை காலமும் நாளாந்த பெயருக்காக 20 கிலோ தேயிலை பறித்த நிலையில், கடந்த 12 ஆம் திகதி முதல் 23 கிலோ தேயிலை பறிக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தத்தை தொழிலாளர்களிடம் தோட்ட நிர்வாகம் கொண்டு சென்றதன் காரணமாக கடந்த சில நாட்களுக்கு முன்னர் வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

இவ்விடயம் தொடர்பாக நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் இ.தொ.கா. பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமானுக்கு தெரியப்படுத்தியதன் பின்னர், அவரின் ஆலோசனைகளுக்கமைய இ.தொ.காவின் குழு ஒன்றின் மூலம் தோட்ட நிர்வாகத்திடம் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வைப் பெற்றுக்கொடுக்குமாறு ஆலோசனை வழங்கியிருந்தார்.

அதற்கமைய, கோணப்பிட்டிய தோட்டக் காரியாலயத்தில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில், தோட்ட முகாமையாளர் ஹிரோமல் குணரத்ன, இராகலை பிராந்திய காரியாலய இயக்குனர் காசிராஜ், வலப்பனை பிரதேச இ.தொ.கா. இணைப்பாளர்களான பாலா மற்றும் டட்லி உட்பட்ட தோட்டத் தலைவர், தலைவி உட்பட தொழிலாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மேலும், இக்கலந்துரையாடலின்போது கோணப்பிட்டிய தோட்டத் தொழிலாளர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட தீர்வுகள் பின்வருமாறு...

நாளொன்றுக்கு 23 கிலோ கொழுந்து பறிக்க வேண்டும் என்ற நிபந்தனை, 13 ஆம் திகதியிலிருந்து 20 கிலோவாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரையில் 20 கிலோவுக்கு 4 கிலோ கொழுந்து கழிக்கப்பட்ட போதும், தற்போது 20 கிலோவுக்கு 2 கிலோ கொழுந்து கழிக்கப்பட வேண்டுமென்றும் பேச்சுவார்த்தையில் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த பதினான்கு வருடங்களாக 16 தொழிலாளர்கள் தினசரி நாட்கூலியாக வேலை செய்த போதும், தற்போது தோட்ட பெயர்ப் பதிவில் இடம்பெற்றனர்.

தோட்ட மக்களின் கோரிக்கைக்கமைவாக தோட்ட நலன்புரி அதிகாரியை இடமாற்றம் செய்யவேண்டுமென்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

# கண்டியில் விபத்து; மாணவி பலி



எம்.ஏ.அமீனுல்லா

கண்டி,கெட்டம்பே மஹாநாம கல்லூரியில் உயர்தரம் பயிலும் 17 வயதுடைய மாணவி கண்டி சுதுஹும்பொல பிரதேசத்தில் நேற்றுக் காலை (16) இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்துள்ளார்.

உயர்தர தனியார் வகுப்பில் கலந்துகொள்வதற்காக குறித்த மாணவி தனது தந்தையுடன் மோட்டார் சைக்கிளில் கெலிஓயாவிலிருந்து கண்டி நோக்கிச் சென்றுக் கொண்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர் கெலிஓயா, பெத்தியகொட பகுதியைச் சேர்ந்த இஷால தேஷானி கெதிக்கெனல்ல என்ற மாணவியாவார்.

மழையுடன் கூடிய காலநிலை காரணமாக மோட்டார் சைக்கிள் வழுக்கிவிழுந்ததில் மாணவி பஸ்ஸின் அடியில் விழுந்துள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் மாணவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்ற தந்தைக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லையெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தனியார் பஸ் சாரதி கண்டி பொலிஸ் போக்குவரத்துப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அனுருத்த பண்டாரநாயக்கவின் பணிப்புரையின் பேரில், பிரதான பொலிஸ் பரிசோதகர் கோட்டேகொட உள்ளிட்ட குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நத்தாரை முன்னிட்டு ஹட்டனில் முட்டை விலை குறைப்பு

மஸ்கெலியா நிருபர்

நத்தார் பண்டிகைக் காலத்தில் ஹட்டன் மக்களுக்கு குறைந்த விலையில் முட்டைகளை வழங்கமுடியுமென ஹட்டனிலுள்ள முட்டை விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த வியாபாரிகள், நத்தார் பண்டிகை நெருங்கும்போது தற்போதைய விலையை விட குறைந்த விலையில் அதாவது, 32 முதல் 35 ரூபா வரை முட்டை வழங்க வாய்ப்புள்ளதாகக் கூறுகின்றனர்.

தற்போது முட்டை கையிருப்பு விலை படிப்படியாகக் குறையும்போக்கு காணப்படுவதால் அதன் பலனை அப்பகுதி மக்களுக்கு வழங்கமுடியும் என்றனர்.

# மாணவர்களுக்கான ஓய்வு நேரங்களை பயனுள்ளதாக மாற்ற பெற்றோர் வாய்ப்பளிக்குக

## அதிபர் ஹலீம்தீன் தெரிவிப்பு





உக்குவளை நிருபர்

மாணவர்கள் ஓய்வு நேரங்களைப் பயனுள்ள வழிகளில் செலவழிக்கப் பழகவேண்டும். இதற்காக பெற்றோர் அவர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென உக்குவளை அஹதிய்யா பாடசாலை அதிபர் எம்.எஸ்.ஹலீம்தீன் தெரிவித்தார்.

உக்குவளை அஹதிய்யா பாடசாலைக்கு விடுமுறை வழங்கும் நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்களுடனான கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அஹதிய்யா பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு மத விழுமியங்களுடன் பெற்ற கல்வியைக்கொண்டு எவ்வாறு வாழவேண்டுமெனவும் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. இதேபோன்று இந்துமக்களுக்கும் அறநெறி பௌத்தர்களுக்கும் அறநெறிப் பாடசாலை, கிறிஸ்தவர்களுக்கும் மறைக்கல்வி என்ற பெயரில் ஞாயிறுதோறும் தகுதியுள்ள ஆசிரியர்களால் பாடநெறிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பரீட்சைகள் திணைக்களத்தினால் நடத்தப்படும் இவற்றின் பரீட்சைகளின் பெறுபேறுகள் மிகப் பயனுள்ளவை. அந்தவகையில், நடத்தப்பட்ட அஹதிய்யா இறுதியாண்டுப் பரீட்சையில் தோற்றிய ஏழு மாணவர்களும் சித்தியெய்திருப்பது குறித்து பெருமிதமடைகிறோம்.

அவர்கள் இக்கல்வியில் காட்டிய அக்கறையே இதற்கான காரணமெனலாம். இந்நிலையில், மாணவர்கள் ஓய்வு நேரங்களைப் பயனுள்ள வழிகளில் செலவழிக்கப் பழகவேண்டும். அத்துடன், மத ஒழுக்கப் பண்பாடுகளைக் கண்டிப்பாகப் பின்பற்றி நடந்துகொள்ள வேண்டும். பிள்ளைகளுக்கு பெற்றோர் அதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்- என்றார்.

# முச்சக்கரவண்டி கடத்தல் விவகாரம்: சந்தேகநபர்கள் கைது

## கம்பளையில் சம்பவம்

முச்சக்கரவண்டிச் சாரதியைத் தாக்கி காட்டுக்குள் தள்ளிவிட்டு, முச்சக்கரவண்டியைக் கடத்திச்சென்ற இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கம்பளை பகுதியில் நேற்று முன்தினம் (15) மதியம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கம்பளை நகரிலிருந்து அம்புலாவ பகுதிக்கு செல்ல வேண்டும் எனக்கூறி இரு நபர்கள் வாடகை முச்சக்கரவண்டியொன்றில் ஏறிச் சென்றுள்ளனர்.

அம்புலாவ, கல்பங்கலாவ பகுதியில் வைத்து, முச்சக்கரவண்டிச் சாரதியின் ஜெக்கட்டை எடுத்து அவரின் கழுத்தை நெரித்து அவரை அடித்து காட்டுப் பகுதியில் தள்ளிவிட்டு முச்சக்கரவண்டியைக் கடத்தியுள்ளனர்.

வேகமாக முச்சக்கரவண்டியை ஓட்டிச்செல்கையில், ஹெம்மாத்தகம பகுதியிலிருந்து அம்புலாவ பகுதிக்குச் சென்ற காரொன்றுடன் மோதி முச்சக்கரவண்டி விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தையடுத்து முச்சக்கரவண்டியைக் கடத்திய இருவரும் காட்டுக்குள் பாய்ந்து தலைமறைவாகியுள்ளனர்.

விடயம் பிரதேச மக்களுக்குத் தெரியவர, இரவு முழுவதும் தேடும் பணியில் ஈடுபட்டு இரு சந்தேக நபர்களைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

23 மற்றும் 25 வயதுகளையுடைய இரு சந்தேக நபர்களும் கம்பளை, எக்கால்ல பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நுவரெலியாவில் பிரிடோ நிறுவனத்தினால் விழிப்புணர்வு செயற்றிட்டங்கள்







எஸ்.கணேசன்

பெண்களுக்கெதிரான மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை ஒழிப்பதற்கான தேசிய செயற்றிட்டத்தை முன்னிலைப்படுத்தி நாடளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்வுகள் கடந்த நவம்பர் 25ஆம் திகதி முதல் இந்த மாதம் 15ஆம் திகதி வரை இடம்பெற்றன.

அந்த வகையில், பிரிடோ நிறுவனம் நுவரெலியா மாவட்டத்தில் தோட்டப்புற மக்களுக்கு பல்வேறு விழிப்புணர்வுத் திட்டங்களை முன்னெடுத்து வந்த நிலையில், நேற்று முன்தினம் பிரிடோ நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் மைக்கல் ஜோக்கிம் தலைமையில் பிரிடோ பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் ஹட்டனில் விஷேட நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் , தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கலைச்செல்வி கலந்துகொண்டார்.

வீட்டில் பெண்களுக்கெதிராக இடம்பெறும் வன்முறைகளைத் தடுத்தல் மற்றும் பணியிடத்தில் பெண்கள் முகங்கொடுக்கும் துன்புறுத்தல்களைத் தடுப்பதற்கு இந்தத் திட்டமூடாக பிரயோக ரீதியாக செயற்படவேண்டுமென இதன்போது கலந்து கொண்ட பெண்கள் கருத்து தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் ஹட்டன் பொலிஸ் நிலைய பெண்கள் பிரிவு அதிகாரி, கிராம சேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## ஆங்கில மொழி விருத்தி:

# இலங்கைக்கு வருகை தந்துள்ள வெளிநாட்டு பயிற்றுவிப்பாளர்கள்




ஜே.எம்.ஹாபீஸ்

1962ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட Peace Corps நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மலையகப் பாடசாலைகளில் ஆங்கில மொழியைக் கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக இலங்கை வந்துள்ள வெளிநாட்டுக் குழுவினருக்கு 12 வாரம் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் 2 வருடகாலத்துக்கு இலங்கையில் தங்கியிருந்து ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுடன் இணைந்து கிராமியப் பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வியை மேம்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவர்கள் மத்திய, ஊவா மாகாணங்களிலுள்ள பாடசாலைகளில் ஆங்கில மொழி ஆசிரியர்களாகப் பணியாற்றுவர் என அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

# மதுபோதையில் இ.போ.ச. பஸ்ஸை செலுத்திய சாரதி கைது

## தெல்தெனியவில் சம்பவம்

ஜே.எம்.ஹாபீஸ்

தெல்தெனியவில் மது அருந்திவிட்டு இ.போ.ச. பஸ்ஸைச் செலுத்திய சாரதி தெல்தெனிய பொலிஸாரால் நேற்றுமுன்தினம் (15) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த பஸ் சாரதி மது போதையில் பயணிகளை ஏற்றிச்சென்ற குற்றத்துக்காக அவர் மீது வழக்குத் தொடர பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதற்கு முன்னரும் இதே தவறை குறித்த சாரதி செய்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக மத்திய பிராந்திய இலங்கைப் போக்குவரத்துச் சபை அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். மேலும், கடமை நேரத்தில் போதையில் இருந்தமை, வீதி ஒழுங்குகளை மீறியமை போன்ற குற்றச்சாட்டுகளுக்காக சாரதி மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் உணவுப்பொருட்கள் சந்தையில்

## ஜனவரி முதல் புதிய வர்த்தமானி வெளிவரும்

எம்.ஏ.அமீனுல்லா

பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் உணவுப் பொருட்கள் சந்தையில் இருப்பதாகவும் சில உற்பத்தியாளர்கள் அவற்றை விளம்பரப்படுத்த சிறுவர்களைப் பயன்படுத்துவதாகவும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக பிரதியமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் அடங்கிய பொருட்களைச் சந்தைக்கு வெளியிடும் வர்த்தகர்கள் தமது பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு நாட்டில் ஆட்கள் இருக்கவேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டுமெனவும் இதன் தாக்கத்தைக் குறைக்க அடுத்த வருட தொடக்கத்திலிருந்து பல நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

கண்டியில் அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த பிரதியமைச்சர் ஹன்சக விஜேமுனி,

''மக்கள் உண்ணும் உணவு தொடர்பாக அரசு குறிப்பிட்ட பொறுப்பை ஏற்கவேண்டும். கடந்த காலங்களில் இந்தப் பொறுப்பு சுகாதார அமைச்சு, விவசாய அமைச்சு மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சின் வேலையென்று சுட்டிக்காட்டி உரிய பொறுப்பை முன்னும் பின்னுமாக மாற்றிய முயற்சிகளை நாம் பார்த்தோம்.

12 வயதுக்குட்பட்ட குழந்தைகளை உணவு விளம்பரங்களில் நேரடியாக உடல் நலத்தைப் பாதிக்கும் வகையில் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க சட்டம் தேவை. அதிகளவு இரசாயனங்கள் அடங்கிய உணவுப் பொருட்களைப் பயன்படுத்துவதே இன்றிருக்கும் பல நோய்களுக்குக் காரணம்.

இத்தகைய உணவுப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காகக் குழந்தைகளைப் பயன்படுத்தி மிகவும் உணர்ச்சிவசமான விளம்பரங்களை உருவாக்குகின்றனர். இவற்றை நீண்ட நாட்களாக சாப்பிடுவதால் குழந்தைகளின் ஆரோக்கியத்தில் ஏற்படும் எதிர்மறையான பாதிப்புகள் குறித்து தயாரிப்பாளர்களும் தொழிலதிபர்களும் சிந்திக்க வேண்டும். ஒரு தொழிலதிபருக்கு தனது பொருட்களை விற்க ஆட்கள் தேவை. இந்த உணவுகளை தொடர்ந்து சாப்பிடுவதன் மூலம், எதிர்காலத்தில் நோய்வாய்ப்பட்ட தலைமுறையே உருவாகும்.

இவற்றில் சில உணவுப்பொருட்கள் சந்தைக்கேற்றதாக இல்லை. உற்பத்தித் துறையையும் பார்த்துத்தான் முடிவெடுக்கிறோம். மக்கள் ஆரோக்கியமாக இருக்க உதவும் வகையில் உணவு மற்றும் மருந்துச் சான்றிதழை வழங்குவது அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பு. இதற்காக கடந்த காலங்களில் பல வர்த்தமானிகளும் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால், பல்வேறு காரணங்களால் அவை செயற்படுத்தப்படவில்லை. எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் இவற்றை நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

இரசாயனங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் பொருட்களே அதிகம் சந்தையில் உள்ளன. பழங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படாவிட்டால், அதற்குப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்களை லேபிளில் குறிப்பிட வேண்டும். 03 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குக் கொடுக்கக்கூடாத உணவு வகைகள் உள்ளன. இதுபற்றிய எந்தக் குறிப்பும் இல்லாமல் சம்பந்தப்பட்ட பொருட்கள் சந்தைப்படுத்தப்படுகின்றன. புகை பிடிப்பதால் ஏற்படும் பாதிப்பை விட உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் உணவுப் பொருட்களே சந்தையில் உள்ளன.

இது தொடர்பில் 2005ஆம் ஆண்டு முதல் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வர்த்தமானிகளும் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால், சில காரணங்களால் அவை செயற்படுத்தப்படவில்லை. இந்த வர்த்தமானி அறிவிப்புகளைத் தேவையான திருத்தங்களுடன் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்தவுள்ளோம்''- என்றார்.

# இரு முச்சக்கரவண்டிகள் நேருக்கு நேர் மோதி விபத்து

ராமு தனராஜா

பதுளை - செங்கலடி பிரதான வீதி பசறை 13ஆம் கட்டை தமிழ்த் தேசியப் பாடசாலைக்கருகாமையில் பசறையிலிருந்து லுணுகலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த முச்சக்கரவண்டியொன்று பசறை 13ஆம் கட்டைப் பகுதியிலிருந்து பசறை நகர் நோக்கிச் வந்த முச்சக்கரவண்டியுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்த நிலையில், பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பசறை பகுதியில் விடுதியொன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றுக்காக மடுல்சீமை, கொக்காகல பகுதியிலிருந்து முச்சக்கரவண்டியில் பசறைப் பகுதிக்குச் சென்ற இளைஞர்கள் நிகழ்வு முடிந்து லுணுகலைக்குச் சென்றுகொண்டிருந்த போது பசறை 14ஆம் கட்டைப் பகுதியிலிருந்து முச்சக்கரவண்டியொன்று பசறை நகரை நோக்கிச் சென்ற முச்சக்கர வண்டியில் மோதி இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் சாரதியான 65 வயதுடைய நபரொருவர் பலத்த காயமடைந்த நிலையில், பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மேலும், பசறையிலிருந்து லுணுகலையை நோக்கிச் சென்று கொண்டிருந்த முச்சக்கர வண்டியில் சென்ற இளைஞர்கள் சாரதி உட்பட அனைவரும் மது போதையில் இருந்ததாகவும் பின்னர் விபத்து இடம்பெற்றதன் பின்னர் தப்பிச் செல்ல முயற்சித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முச்சக்கரவண்டியில் பயணித்த 31,39 வயதுகளையுடைய மற்றும் சாரதி உட்பட மேலும் ஒருவர் பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பசறை நூலக கேட்போர் கூடத்தில் ஒளிவிழா









ராமு தனராஜா

மானிடகுலம் மீட்கவந்த மாபரன் இயேசுவின் பிறப்பின் சிறப்பை அறிவிக்கும் நத்தார் பண்டிகையையொட்டி பசறை பங்கு, புனித யூதாததேயு திருத்தலத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான ஒளிவிழா நிகழ்வானது பசறை நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக லுணுகலை பங்கின் உதவிப் பங்குத்தந்தை (புனித லூர்து அன்னை ஆலயம்) அருட்பணி ஸ்டீபன்(OCD), பசறை பங்கின் பங்குத்தந்தை அருட்பணி ஜேசுபாலன்(OMI) உள்ளிட்ட அருட்சகோதர சகோதரிகளும் பசறை ஜும்ஆப் பள்ளிவாசல் இமாம் நிஹாப், பதுளை போதனா வைத்தியசாலையின் வைத்தியர் கிர்ஷான், பசறை வலயக்கல்விப் பணிப்பாளர் சரினா பேகம், பசறை தமிழ்த் தேசியக் கல்லூரியின் அதிபர் பிரபாகரன், மீரியபெத்த கிராம சேவகர் பிரிவின் கிராம உத்தியோகத்தர் சமரசிங்க பண்டா ஆகியோரோடு பசறை பங்கின் பங்கு சமூகமும் இணைந்து விழாவை சிறப்பித்தனர்.

இதன்போது கலைநிகழ்ச்சிகள் மேடையை அலங்கரித்ததோடு, விருந்தினர்களுக்கான நினைவுச் சின்னங்களும் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய ஜனாதிபதி - பிரதமரினால் அநுரவுக்கு மகத்தான வரவேற்பு





இந்தியாவுக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை வரவேற்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு நேற்று (16) காலை இந்திய ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லமான ராஷ்டிரபதி பவனில் நடைபெற்றது.

குதிரைப்படை அணிவகுப்புடன் ராஷ்டிரபதி பவனுக்கு அழைத்து வரப்பட்ட ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு மற்றும் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரினால் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதன்போது பூரண அரச மரியாதையுடன் 21 மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வரவேற்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து இந்திய இராணுவத்தின் அணிவகுப்பு மரியாதை வழங்கி அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதன்பின், இருதரப்பு பிரதிநிதிகளும் இரு நாட்டு தலைவர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டனர். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் உத்தியோகபூர்வ வரவேற்பு நிகழ்வில் இராஜதந்திரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

உத்தியோகபூர்வ வரவேற்பு நிகழ்வைத் தொடர்ந்து, ராஜ்கொட்டில் உள்ள மகாத்மா காந்தியின் சிலைக்கு ஜனாதிபதி அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் தனது முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயத்தை நினைவுகூரும் வகையில் ராஜ்கொட்டில் உள்ள காந்தி தர்ஷன் வளாகத்தில் மரக்கன்று ஒன்றை நாட்டிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, விருந்தினர் புத்தகத்திலும் கையொப்பமிட்டார்.

## காலி சிறைச்சாலையில் இவ்வருடத்தில் 540 கைத்தொலைபேசிகள் பறிமுதல்

காலி சிறைச்சாலையில் இவ்வருடம் இதுவரையில் 540 கையடக்கத் தொலைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக புதிய அரசாங்கத்தின் முதலாவது காலி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலி மாவட்ட செயலகத்தில் தொழிற்கல்வி பிரதியமைச்சர் நளின் ஹேவகே தலைமையில் அண்மையில்(12) நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த தகவல் வெளியிடப்பட்டது.

கையடக்கத் தொலைபேசிகள் கடத்தலுக்கு சிறைச்சாலை அமைந்திருந்த இடம் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளதாக காலி சிறைச்சாலையின் பிரதி பிரதம சிறைச்சாலை அதிகாரி தனுஷ்க புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

“சிறைச் சுவருக்குப் பக்கத்தில் ஒரு சாலை உள்ளது.

மேலும் பெரிய பொதிகளை சுவருக்கு மேல் வீசலாம். பாதுகாப்பு நடவடிக்கைகள் இருந்தபோதிலும், இந்த பொருட்கள் புத்திசாலித்தனமாக கடத்தப்படுகின்றன. இந்த பொருட்களை பறிமுதல் செய்ய பொலிஸாரின் ஆதரவைப் பெறுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது’’ என்று அவர் மேலும் கூறினார்.

மேலும் கூட்டத்தில் பேசிய காலி மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜகத் சேரம், சுவருக்கு மேல் வலை மற்றும் சிசிரிவி அமைப்பை பொருத்துவதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

“இருப்பினும், சுற்றியுள்ள பகுதி அரசு நிறுவனங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் இது கடினமாகவுள்ளது. அதிக விலை கொண்ட ஜாமர்களை நிறுவ வேண்டும். இந்த பணிகளை 2025இல் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம் என்றார்.

## மீட்டியாகொட துப்பாக்கிச்சூட்டில் தந்தை – மகள் படுகாயம்

மீட்டியாகொட, பாலிமுல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் (15) இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இனந்தெரியாத ஆயுததாரிகள் தந்தை மற்றும் மகள் மீது அவர்களது இல்லத்தில் வைத்து துப்பாக்கிச்சூடு மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். 49 வயதுடைய நபரும் அவரது 29 வயது மகளும் காயமடைந்த நிலையில் பலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.ஒரு கும்பல் வீட்டுக்குள் நுழைந்து, பாதிக்கப் பட்டவர்களை துப்பாக்கியால் சுட்டு, கூரிய ஆயுதங்களால் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. சந்தேகநபர்களை கைதுசெய்ய மீட்டியாகொட பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## எல்ல – வெல்லவாய வீதியின் போக்குவரத்து வழமைக்கு

எம்.ஏ.எம்.ஹசனார்

அடை மழை காரணமாக எல்ல - வெல்லவாய வீதியில் பல பாரிய மரங்கள் முறிந்து வீழ்ந்ததன் காரணமாக தடைப்பட்டிருந்த வீதி மீண்டும் போக்குவரத்துக்காக திறக்கப்பட்டுள்ளது. வெல்லவாய மற்றும் எல்ல பிரதேசத்தில் நேற்று பிற்பகல் பெய்த அடை மழையினால் எல்ல - வெல்லவாய பிரதான வீதியில் உள்ள ஒன்பதாவது மைல் கல்லுக்கும் பத்தாவது மைல் கல்லுக்கும் இடையில் நேற்று முன்தினம் (15) மதியம் பல பாரிய மரங்கள் முறிந்து விழுந்ததில் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டதாக எல்ல போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர். காற்றுடன் கூடிய அடை மழையினால் பல மின்கம்பங்கள், தொலைபேசி கம்பங்கள் முறிந்து விழுந்ததால் அப்பகுதியில் மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பாடல்கள் துண்டிக்கப்பட்டிருந்தது. வீதியில் முறிந்து வீழ்ந்த மரங்களை இராணுவம், பொலிஸார், வீதி அதிகார சபையினர் இணைந்து சீர்செய்த நிலையில், குறித்த வீதி போக்குவரத்துக்காக மீண்டும் திறக்கப்பட்டது.

## தாயைக்கொன்ற மகன் தற்கொலை

மு. லலிதா

கொடக்கவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிசோ கோட்டை பகுதியில் தடியால் மகன் தாக்கியதில் தாய் உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் (15) பதிவான நிலையில், கொலை நடந்த தினத்தன்றே மகனும் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

தற்கொலை செய்துகொண்ட குறித்த நபர் 54 வயதுடைய கல்பாய பல்லேபெத்த பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதுடன், குறித்த நபரை கொலை குற்றத்தில் கைதுசெய்ய பொலிஸாரால் தேடப்பட்டிருந்த நிலையிலேயே சந்தேக நபர் இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

மேலும், குறித்த நபர் உடவெலவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருமடைய பிரதேசத்தில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டமை விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலும் நீதவான் விசாரணைக்கு பின்னர் சடலம் எம்பிலிபிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை கொடக்கவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



**இராணுவ ஊடகம் மற்றும் உளவியல் செயற்பாட்டு பணிப்பகத்தின் பணிப்பாளராக பிரிகேடியர் எம்.ஜே.ஆர்.எச். மெதகொட ஆர்.எஸ்.பீ, யூ.எஸ்.பீ, என்.டி.சி, பீ.எஸ்.சி, ஐஜீ நேற்று (16) தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.**


## அமைச்சுகளுக்கு 03 புதிய செயலர்கள்; வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் புதிதாக நியமிக்கப்பட்ட மூன்று அமைச்சுகளின் பெயர்களைக் குறிப்பிட்டு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளராக கே.டி.ஆர்.ஒல்கா 03.12.2024 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

சுகாதார மற்றும் ஊடக அமைச்சுகளின் புதிய செயலாளராக விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க 11.12.2024 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சின் செயலாளராக எம்.ஏ.எல்.எஸ்.என்.கே.மந்திரிநாயக்க 11.12.2024 முதல் அமுலுக்குவரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.



இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 52(1) ஆம் உறுப் புரையின் பிரகாரம், ஜனாதிபதியால் குறித்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த நியமனக் கடிதங்கள் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாநாயக்கவினால் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







**முகத்துவாரம் மிராக்கல் கிட்ஸ் ப்ரி ஸ்கூல் முன்பள்ளியின் 15ஆவது வருட பூர்த்தியும் முன்பள்ளி மாணவர்களுக்கான பட்டமளிப்பு மற்றும் பரிசளிப்பு வைபவமும் முகத்துவாரம் புனித ஜோன்ஸ் தேவாலய கேட்போர் கூடத்தில் தலைமை ஆசிரியர் திருமதி ரிஸ்மினா ரபீக்கின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சர்வதேச மனித உரிமை அமைப்பின் தலைவர் பிரதீப்சார்ள்ஸ், சிறப்பு விருந்தினராக கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஜோசப் பெர்னாண்டோ, சமூக சேவையாளரும் கலைஞருமான எஸ்.முத்துக்குமார் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.**

**படங்கள்:** *எம். நசார்*

# அஷ்ஷெய்க் முஹம்மத் பாஸியின் வருடாந்த கத்தமுல் குர்ஆன் மஜ்லிஸ்



பேருவளை பீ.எம் முக்தார்

பேருவளை, சீனன்கோட்டை, கங்கானம்கொடை நூராணிய்யா ஸாவியா மஸ்ஜிதில் வருடாந்தம் நடைபெற்று வரும் ஷாதுலிய்யா தரீக்காவின் முன்னாள் செய்ஹுஸ் ஸஜ்ஜாதா அஷ்ஷெய்க் முஹம்மத் பாஸி பின் ஷெய்ஹ் முஹம்மத் இப்றாஹிம் அல் பாஸி அல் மக்கி, அஷ் ஷாதுலி ரலியல்லாஹு அன்ஹு அன்னவர்களின் பெயரிலான, 28ஆவது வருட கத்தமுல் குர்ஆன் மஜ்லிஸ் கடந்த வியாழக்கிழமை(12) நடைபெற்றது.

ஸாவிய்யா இமாம்களான, மௌலவி கத்தமுல் ஷாதுலி, எம்.எஸ் ஆஸாத் (அஜ்வதி), எம்.ஆர் அப்துர் ரஹ்மான் (அஷ்ஷாதுலி) ஆகியோர் தலைமையில் அஸர் தொழுகையைத் தொடர்ந்து கதமுல் குர்ஆன் மஜ்லிஸும், மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து வலீபா, யாகூதிய்யாவும் இடம்பெற்றது.



இஷா தொழுகையைத் தொடர்ந்து ஹழரா மஜ்லிஸும், அதன் பின்னர் முஸாக்கராவும் துஆவும் இடம் பெற்றது.

சீனன்கோட்டை பள்ளிச் சங்க இணைச் செயலாளரும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான கலீபதுஷ்ஷாதுலி மௌலவி அஷ்ஷெய்க் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன், சீனன்கோட்டை ஜாமியத்துல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட பணிப்பாளர் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.ஜே.எம் பஸ்லான், மௌலவி எம்.எஸ் ஆஸாத், மௌலவி ஹாபிஸ், பர்ஹான் ரஊப் ஆகியோர் ஹழரா மஜ்லிஸை நடத்தினர்.

மேற்படி, ஸாவிய்யா பரிபாலன குழு ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் சீனன்கோட்டை ஜாமியத்துல் பாஸியத்துஷ் ஷாதுலிய்யா கலாபீட அதிபர் மௌலவி எம்.அஸ்மிகான் உட்பட கலீபாக்கள், உலமாக்கள், சீனன்கோட்டை பள்ளிச் சங்க உறுப்பினர்கள், பெருமளவிலான இஹ்வான்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அன்னாரின் ஞாபகார்த்தமாக ஷாதுலிய்யா தரீக்காவை பின்பற்றும் நாட்டின் பல பகுதிகளிலும் ஞாபகார்த்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## சப்ரகமுவ மாகாண தொழில்முனைவோர் விருதுகளின் உத்தியோகபூர்வ வங்கிப் பங்காளராக செலான் வங்கி

2024ஆம் ஆண்டுக்கான சப்ரகமுவ மாகாண தொழில்முனைவோர் விருதுகளின் உத்தியோகபூர்வ வங்கிப் பங்காளராக செலான் வங்கி இணைந்துள்ளது.

செலான் வங்கி அண்மையில் 2024இற்கான சப்ரகமுவ மாகாண தொழில்முனைவோருக்கான விருது வழங்கும் நிகழ்வின் உத்தியோகபூர்வ வங்கிப் பங்காளராக இணைந்தது. நாளை (18) நடத்த திட்டமிடப்பட்டுள்ள இந்நிகழ்வு சப்ரகமுவ வணிக சமூகத்துக்கான மிக உயர்ந்த, மாகாண மட்ட கௌரவமாகக் கருதப்படுகிறது.

இந் நிகழ்வு பிராந்தியத்தின் சிறந்த தொழில் முனைவோர் மற்றும் பொருளாதாரத்துக்கான அவர்களின் பங்களிப்புகளை நினைவுகூரும், பாராட்டும் மற்றும் ஊக்கமளிக்கும் வருடாந்த கொண்டாட்டமாகும்.

இந் நிகழ்வு நம்பகமான நிகழ்வாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அரசு மற்றும் தனியார்துறை நிறுவனங்களில் உள்ள தொழில் வல்லுநர்கள் மற்றும் நிபுணர்களை சுயாதீனமான தீர்ப்பளிக்கும் செயற்பாட்டில் பங்கேற்க அழைக்கிறது. சகல வணிகத் துறைகளிலும் நுண், சிறிய, நடுத்தர, பெரிய மற்றும் மிகப் பெரிய அளவிலான அனைத்து முதலீட்டு மட்டங்களிலும் சிறந்து விளங்கும் நிறுவனங்களுக்கு இவ் விருதுகள் வழங்கப்படுகின்றன. ஆண்டின் சிறந்த பெண் தொழில்முனைவோர், ஆண்டின் மாற்றுத்திறனாளி தொழில்முனைவோர் மற்றும் ஆண்டின் இளம் தொழில்முனைவோர் ஆகிய சிறப்பு அங்கீகார விருதுகளும் உள்ளடங்கும். உற்பத்தி, சேவை, வர்த்தகம் மற்றும் விவசாயம் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படும் அதே வேளை, இரத்தினம் மற்றும் நகைகள், தேயிலை உற்பத்தி, சுற்றுலா மற்றும் புதுமையான வணிகத் துறைகளில் இருந்து பொருளாதாரத்துக்கான பங்களிப்புகளை அங்கீகரிக்கும் வகையில் சிறப்பு விருதுகள் வழங்கப்படுகின்றன.

இந் நிகழ்வுக்கான செலான் வங்கியின் அனுசரணையானது சப்ரகமுவ மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான(SMEs) வங்கியின் ஆதரவையும் தொடர்ச்சியான வலுவூட்டலையும் முன்னிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. இது பரந்த வங்கித் தீர்வுகளுக்கான அணுகலை வழங்குவதன் மூலம் வணிகங்களின் வளர்ச்சிக்கு உதவும் முயற்சியாகும்.

இந் நிகழ்வு, SMEகளை மேம்படுத்துவதற்கும் அவர்களின் தொழில் திறனை வெளிப்படுத்துவதற்கும் தேவையான கருவிகள் மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட நிபுணர் ஆலோசனைகளை வழங்கி உலக சந்தையில் பிராந்தியத்தின் போட்டித்தன்மையை பலப்படுத்த அன்புடன் அரவணைக்கும் வங்கிக்கு ஒரு தனித்துவமான தளமாக விளங்குகிறது.

பிராந்தியத்தின் முன்னணி தொழில்முனைவோர் அமைப்பான சப்ரகமுவ வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம் மற்றும் கைத்தொழில் அமைச்சின் கீழுள்ள தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை (NEDA) ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்படும் இந் நிகழ்வு மாகாணத்தில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. பிராந்தியத்தில் நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க இது ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது. ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படும் இந் நிகழ்வானது இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் உள்ள 29 பிரதேச செயலகங்கள், மாவட்ட வர்த்தக சங்கங்கள் மற்றும் மாவட்ட சம்மேளனங்களை உள்ளடக்கியது.

மக்களை வலுவூட்டல் மற்றும் நாட்டுக்குள் ஒரு செழிப்பான நிதிச் சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட செலான் வங்கி, 2024ஆம் ஆண்டுக்கான சப்ரகமுவ மாகாண தொழில்முனைவோர் விருது வழங்கும் நிகழ்வுடன் இணைந்து அவர்களின் முழு திறனையும் அடைய உதவ ஆர்வமாகவுள்ளது.

# எலிக்காய்ச்சல் தொடர்பில் விவசாயிகளுக்கும் மக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் களப்பணி



**(மாளிகைக்காடு செய்தியாளர்)**

எலிக்காய்ச்சல் சம்பந்தமாக விவசாயிகளுக்கும் மக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் களப்பணி நிகழ்ச்சி காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா வசீர் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது.

இதன்போது மக்களை விழிப்பூட்டும் நடவடிக்கைகள் இடம்பெற்றன. அதன் ஓர் அங்கமாக காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் அறிவித்தலொன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மனிதர்கள் ஏன் எலிக்காய்ச்சலுக்கு பயப்பட வேண்டும்? வட மாகாணத்தின் பல பகுதிகளிலும் அதிகரித்த எண்ணிக்கையில் சடுதியான மர்மக் காய்ச்சலொன்று பரவி வருகின்றது.

விரைவான, திட்டமிடப்படாத நகரமயமாக்கல் மற்றும் மோசமான சுகாதாரம், அலட்சியம் ஆகியவற்றின் காரணமாக வளரும் நாடுகளில் கடுமையான காய்ச்சலை ஏற்படுத்தும் நோய்க்கான முக்கிய காரணமாக லெப்டோஸ்பைரோசிஸ் அடையாளம் காணப்பட்டிருக்கிறது. வீட்டு மற்றும் காட்டு விலங்குகள் லெப்டோஸ்பைர்களை எடுத்துச் செல்வதால் அவ்வாறான இடங்களில் வசிக்கும் ஒவ்வொரு நபருக்கும் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது.

சுகாதார ஊழியர்கள், கால்நடைப் பராமரிப்பாளர்கள், விவசாயிகள் மற்றும் பண்ணைத் தொழிலாளர்கள், மீனவர்கள், கொறித்துண்ணிகளினால் கடிபடுபவர்கள், நீரில் விளையாடுபவர்கள், வெள்ளம் பாதித்த பகுதிகளில் தன்னார்வ மீட்புப் பணிகளில் ஈடுபடுபவர்கள், துப்புரவுப் பணியாளர்கள், கழிவுநீர் தொழிலாளர்கள் இந்த நோயினால் அதிகம் பாதிக்கப்படக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

லெப்டோஸ்பைரோசிஸ் பக்டீரியாவினால் பாதிக்கப்பட்ட விலங்குகளின் அதாவது எலிகள், நாய்கள், கால்நடைகளான ஆடு, மாடு, பன்றிகள் மற்றும் வன விலங்குகளின் சிறுநீர் வெள்ள நீர், ஆறு, குளம் போன்ற பெரும் நன்னீர் நிலைகளில் கலப்பதால் இந்த நோய்த்தொற்று ஏற்படுகிறது. இப்படியான அசுத்த நீர் காயங்களில் படுவதால், அந்த நீரில் வாய் கொப்பளிப்பதால் அல்லது குடிப்பதால் மனிதர்களை இந்த நோய் தொற்றிக் கொள்கிறது.

எனவே, வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களின் பின்னர் குளம் குட்டைகளில் குளிப்பதைத் தவிர்த்தல், வெள்ளம் பார்க்கச் செல்வதைத் தவிர்த்தல், கொதித்தாறிய சுத்தமான நீரைப் பருகுதல், விவசாய வேலைகளுக்கு பூட்ஸ் சப்பாத்து அணிதல், காலில் உள்ள காயங்களை மூடி பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமாக இந்த நோய் தொற்றுவதிலிருந்து பாதுகாப்புப் பெற முடியும். அதிக காய்ச்சல், தலைவலி, உடல்வலி, கண் மஞ்சளாதல் போன்ற அறிகுறிகள் இருந்தால் தாமதிக்காமல் அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்று வைத்திய ஆலோசனை பெற்றுக்கொள்வது மிகவும் உசிதமானது.

அதேபோல, உங்கள் பிரதேசங்களில் எலிக்காய்ச்சல் பரவினால் இந்த நோய் உங்களுக்கு ஏற்படாமலிருக்க தடுப்பு மருந்துகளை Prophylaxis பெற்றுக்கொள்ள முடியும். எலிக்காய்ச்சல் குறித்து தெரிந்து கொள்ள, இலவசமாக தடுப்பு மருந்துகளைப் பெற்றுக்கொள்ள உங்கள் பிரதேசத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளை அல்லது வைத்தியசாலைகளை நாட முடியுமென காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் அறிவித்தல் வெளியிட்டுள்ளது.



**திருகோணமலை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிண்ணியா சோலை வெட்டுவான், மயிலடைப்பஞ்சேனை மக்களுக்கு உலருணவுப் பொருட்களை ஞாயிற்றுக்கிழமை(15) வழங்கி வைத்தார். இதில் கிண்ணியா நகர சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.எம்.மஹ்தி உட்படப் பலர் கலந்துகொண்டிருந்தனர். (கிண்ணியா செய்தியாளர்)**

# பட்டிருப்பில் கல்வி ஆய்வு மாநாடு



**(பாண்டிருப்பு செய்தியாளர்)**

பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனையின் வலயக்கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரனின் எண்ணக்கருவில் 'தரமான கல்விக்காக ஒன்றிணைவோம்' எனும் தொனிப்பொருளில் பட்டிருப்பு கல்வி வலயத்தில் முதலாவது கல்வி ஆய்வு மாநாடு களுவாஞ்சிக்குடியில் நடைபெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரன் தலைமையில் நடைபெற்ற இவ்வாய்வு மாநாட்டில் பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் கலந்து கொண்டார்.

அத்துடன், காணி ஆணையாளர் வி.விமல்ராஜ் உட்பட பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், துறைசார்ந்த கல்வியியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இங்கு மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்குவதற்கான முன்மொழிவுகள், அதுசார்ந்த செயற்றிட்டங்கள் தொடர்பில் துறைசார்ந்த கல்வியியலாளர்களினால் ஆய்வுகள் சமர்ப்பிக்கப்பட்டன. அத்துடன், கல்வி ஆய்வு தொடர்பான நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் அதன் முதற்பிரதியை கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் வ.கனகசிங்கம் வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரனிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

இவ்வாய்வு மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுகள், பிரச்சினைகள் சிலவற்றுக்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களினால் தீர்வும் பெற்றுக்கொடுக்கப்பட்டது. இலங்கையிலுள்ள ஏனைய கல்வி வலயங்களுக்கு முன்மாதிரியாக பட்டிருப்பு கல்வி வலயத்தில் முதற்றடவையாக இவ்வாறான கல்வி ஆய்வு மாநாடு நடைபெற்றமையையிட்டு கல்வியியலாளர்கள் பலரும் பாராட்டுத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐந்து தேசிய விருது, சூறா சிறப்பு விருதுகள் பெற்று அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையம் சாதனை



**(அக்கரைப்பற்று செய்தியாளர்)**

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்பட்ட கலாசார மத்திய நிலையங்களுக்கிடையிலான பிரதிபா தேசிய மட்ட சங்கீத, நடனப் போட்டிகளில் அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையம் ஐந்து போட்டிகளில் முதலிடமும் தேசிய ரீதியில் முன்னிலையைப் பெற்றமைக்கு சிறப்பு சூறா விருதும் பெற்று அகில இலங்கை ரீதியில் சாதனை படைத்துள்ளது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையம் கிராமிய பாடல் சிரேஷ்ட பிரிவுக் குழு, பொப் பாடல் குழு, ஆரம்பப் பிரிவு சிறுவர்களின் மழை நடனக் குழு, திருமண ஊர்வலம் அதாவது, மாப்பிள்ளை பைத் குழு, றபான் நடனக் குழு போன்ற போட்டி நிகழ்ச்சிகளில் முதலாம் இடங்களையும் சிறப்பு விருதாக சூறதா விருதையும் பக்கீர் பைத் தனி, கர்நாடக சங்கீதம் தனி, கிராமியப் பாடல் கனிஷ்ட, நாதஸ்வரம் தனி போன்ற நான்கு போட்டி நிகழ்ச்சிகளில் இரண்டாம் இடங்களையும் பெற்று தேசிய ரீதியில் சாதனை படைத்து விருதுகள் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டது.

அலரி மாளிகையில் ஞாயிற்றுக்கிழமை(15) நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் புத்தசாசன சமய மற்றும் கலாசார விவகார அமைச்சர் பேராசிரியர் ஹினிதுமு சுனில் செனவி, பிரதி அமைச்சர் கமகெதர திசாநாயக்க மற்றும் அமைச்சின் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டு அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி ஐ.எல்.றிஸ்வான் மற்றும் போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றிபெற்ற அனைவருக்கும் விருதுகளையும் சான்றிதழ்களையும் வழங்கிவைத்தார்கள்.

அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி ஐ.எல்.றிஸ்வான் தலைமையில் பல வருடங்களாக பல கலாசாரப் போட்டிகளில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்று வருவதையிட்டு அக்கரைப்பற்று கலைஞர்கள், கலை மன்றங்கள் வாழ்த்து தெரிவிக்கின்றன.



**மத்திய முகாம் யுனைட்டெட் பிரண்ட்ஸ் கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்க நளீர் பௌன்டேஷன் அமைப்பின் அனுசரணையில் புதிய சீருடை அறிமுக நிகழ்வு அமைப்பின் காரியாலயத்தில் சனிக்கிழமை(14) இடம்பெற்றது. அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் எம்.ஏ.நளீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்களான ஜஹான், யோகநாதன், மத்திய முகாம் முஹம்மதியா ஜும்ஆ பள்ளிவாசலின் மௌலவி றிபாஸ் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர். (மத்திய முகாம் செய்தியாளர்)**

# களுவாஞ்சிக்குடியில் கௌரவிப்பு நிகழ்வு




**(குருக்கள்மடம் செய்தியாளர்)**

களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகப் பிரிவின் மகிழூர் கிழக்கு கிராம சேவகர் பிரிவின் கீழ் இயங்கும் உதயசங்கமம் மகளிர் கொத்தணி அமைப்பின் வருடாந்த ஒன்றுகூடல் மற்றும் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில்(11) அமைப்பின் தலைவி திருமதி மங்கையற்கரசி கருணாகரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உதயசங்கமம் மகளிர் கொத்தணி அமைப்பின் கீழ் சிறப்பாக இயங்கும் பதினைந்து சுய உதவிக் குழுக்களின் சேமிப்புகள் மற்றும் வழங்கிய கடன் வசதிகள் போன்றவற்றின் முன்னேற்றம் தொடர்பாக சுய உதவிக் குழுக்களினால் காட்சிப்படுத்தப்பட்டதுடன், மகிழூர் கிழக்கு கிராமத்தில் 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. (சா/த) மற்றும் க.பொ.த. (உ/த) பரீட்சைகளில் தங்களது திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம், LOH (Ladder of Hope) அமைப்பின் பொது முகாமையாளர் திருமதி சகுந்தலா ரஞ்சினி மதிதரன், மண்முனை தென் எருவில்பற்று உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன் மற்றும் களுவாஞ்சிக்குடி இலங்கை வங்கி முகாமையாளர் சா.சிவஞானம் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் மகிழூர் கிராமத்தின் முதல் சட்டத்தரணியாகக் கடமைபுரியும் திருமதி நிறோஜினி புருசோத்மன் மற்றும் உதயசங்கமம் மகளிர் அமைப்பின் முன்னேற்றத்துக்கு பங்காற்றிய மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சந்திரசோதி ஜெயதீஸ்வரன் ஆகியோரும் இந்த நிகழ்வில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.



**அக்கரைப்பற்று சுவாமி விபுலானந்தா பாலர் பாடசாலையின் விடுகை விழா இந்து இளைஞர் மன்ற கேட்போர் கூடத்தில் அண்மையில் (12) நடைபெற்றது. விபுலானந்தா சிறுவர் இல்லத்தின் ஸ்தாபகரும் இந்து இளைஞர் மன்றத் தலைவருமான த.கயிலாயபிள்ளை தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளில் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான மஞ்சுள ரத்நாயக்க, க.கோடீஸ்வரன், ஏ.ஆதம்பாவா, ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர். நிகழ்வில் அதிதிகளினால் மாணவர்களுக்கு நினைவுச்சின்னங்களும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஆலையடிவேம்பு செய்தியாளர்)**

# DMDI தொண்டு நிறுவனத்தால் கற்றல் உபகரணம் வழங்கல்



அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அடங்கிய புத்தகப் பைகள் வழங்கும் நிகழ்வு Duniya Melayu Duniya Islam தொண்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் South Eastern Social Organization நிறுவனத்தின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது லீடர் அஷ்ரப் வித்தியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை(15) இடம்பெற்றது.

South Eastern Social Organization னின் தலைவர் எம்.எச்.எம். ஹலிம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு தொண்டு நிறுவனத் தலைவர் கலாநிதி யூ.ரீ.எம்.அன்வர் பிரதம அதிதியாகவும் எம்.முகம்மட் பியாஸ், அஷாட் ஷரீப்டீன் மற்றும் அகீலா ஷரீப்டீன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் சாய்ந்தமருது லீடர் அஷ்ரப் வித்தியாலய அதிபர் எம்.ஐ.சம்சுதீன் விசேட அதிதியாகவும் கலந்துகொண்டு புத்தகப்பைகளை வழங்கினர்.



**அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரண சங்கத்தின் ஏற்பாட்டில் அக். முஹம்மதியா கனிஷ்ட வித்தியாலய குருளைச் சாரணர்களுக்கான சின்னம்சூட்டு விழா அண்மையில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் எம்.ஏ.நபுஹர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு அக்கரைப்பற்று கோட்டக்கல்வி அதிகாரி ஏ.எல். ஜெய்னுடீன் பிரதம அதிதியாகவும் மாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ. உதுமாலெப்பை, உதவி ஆணையாளர் எம்.எச்.ஹம்மாத் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர். சாரண ஆசிரியை ஜே. அஸ்மியாவின் ஒத்துழைப்புடன் இடம்பெற்ற இச் சாரணர் சின்னம் சூட்டு விழாவில் சுமார் ஐம்பது குருளைச் சாரணர்கள் கலந்துகொண்டு சின்னங்களைப் பெற்றுக்கொண்டனர். (கோணாவத்தை செய்தியாளர்)**





**அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கல்வி இளமாணி சிறப்பு கற்கை நெறிக்காக 2022-2025 ஆம் ஆண்டு ஆரம்பப் பிரிவு ஆசிரிய மாணவர்களால் 'ஆரம்பப் பிரிவுக்கான விஞ்ஞானம்' எனும் தொனிப்பொருளில் ஞாயிற்றுக்கிழமை(15) கண்காட்சி நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியான கணேசரத்தினமும் கௌரவ அதிதிகளாக ஆரம்பப் பிரிவு ஆசிரிய மாணவர்களுக்கு வழிகாட்டல் விரிவுரையாளர்களாகக் கடமையாற்றிய கே.கமலதாசன், எம்.எச்.எஸ்.ஆர். மஜீதிய்யா ஆகியோரும் விசேட அதிகளாக ஏ.எம்.முபாரக், கே.எல்.எம்.பார்சாட், ரி. திலகராஜா உட்பட ஏனைய விரிவுரையாளர்களான ஏ.ஜே.வசீல், ஏ.ஏ.ரமீஸ் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். இந்நிகழ்வுகளுக்கு இணைப்பாளராக எஸ்.என்.ஏ.அருஸ் கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.(பாறுக் ஷிஹான்)**

# பெண்களின் விவகாரங்களில் மூடத்தனங்களை மாற்றியமைக்க வேண்டும்

## மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் ஜஸ்டினா முரளிதரன்

(மட்டக்களப்பு செய்தியாளர்)

''சமூகக் கட்டமைப்புகளினால் வடிவமைக்கப்பட்ட கருத்தியல்களைப் பெரிதுபடுத்திக்கொண்டு பெண்களின் விவகாரங்களைச் சீர்தூக்கிப் பார்க்காமல் விலகியிருந்து வந்துள்ளோம். ஆனால், அவற்றை இனிமேலும் அடியொற்றி நடக்காமல் மூடத்தனங்களை மாற்றியமைக்க வேண்டும்'' - என மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் ஜஸ்டினா முரளிதரன் தெரிவித்தார்.

'மாண்புடன் கூடிய மாதவிடாய்' எனும் தொனிப்பொருளில் அமைந்த சர்வதேச நிகழ்வை அனுஷ்டிக்கும் முகமாக விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் நிகழ்ச்சித்திட்ட தலைமை அதிகாரி இந்துமதி ஹரிஹரதாமோதரன் தலைமையில் சனிக்கிழமை (14) இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''சமூகக் கட்டமைப்புகளினால் வடிவமைக்கப்பட்டு காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் பிற்போக்குவாத கருத்தியல் காரணமாக பெண்களின் நலன்கள், மதிப்புகள் பேசப்படாது மறைக்கப்பட்டுக்கொண்டு வந்துள்ளன. மாதவிடாய் எனும் விடயத்தை மறைக்காது



துணிவுடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அதற்கான காலம் இப்பொழுது கைகூடி வந்துள்ளது. தொலைக்காட்சிகளில் கூட இப்பொழுது இதுபற்றி விளம்பரங்கள் ஒளிபரப்பாகின்றன.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் முன்னெடுத்துள்ள இதுவரை காலமும் பேசப்படாது மறைக்கப்பட்டு வந்துள்ள ஆனால், கட்டாயம் பேசப்படவேண்டிய பெண்களின் மாண்புறும் மாதவிடாய் எனும் விடயத்துக்கு மாவட்டச் செயலக நிர்வாகத்தின் முழுமையான ஆதரவை நான் வழங்குவேன். -என்றார்.

இந்நிகழ்வு பற்றித் தெளிவூட்டிய விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் நிகழ்ச்சித் திட்ட தலைமை அதிகாரி இந்துமதி, ''இளவயதுத் திருமணங்கள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ள தற்போதைய காலகட்டத்தில் இந்தக் குற்றச் செயல்களுக்கான காரணங்களை ஆராயும்போது அதற்குப் பின்னணியில் மாதவிடாய் பற்றிய தெளிவு பெண்களிடமும் ஆண்களிடமும் இல்லாதது கண்டறியப்பட்டது.

நாம் ஆரம்பித்த சிறுவர் கழகங்களின் ஊடாக பிள்ளைகளின் தாய்மாரும் பெண் பிள்ளைகளும் இந்த விடயங்களை முன்வைக்கத் தொடங்கினார்கள். எனவே, ஆய்வுகளின் அடிப்படையில் இந்த விடயத்துக்கு கூடுதல் கவனமெடுக்க வேண்டுமென்பது சிபாரிசுகளாக முன்வைக்கப்பட்டது. அதனடிப்படையிலேயே மாண்புறும் மாதவிடாய் எனும் இந்தத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது" - என்றார்.

இந்நிகழ்வில் வைத்திய கலாநிதி சகாய தர்ஷினி ஜெயகுமார், விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் நிறுவனத்தின் நிர்வாக அலுவலர் கந்தன் நிர்மலா, திட்ட உத்தியோகத்தர் புண்ணியமூர்த்தி ஜீவிதா, சமூக ஒருங்கிணைப்பாளர்களான பி. முரளீதரன், கே.சிந்துஜா, கே.லக்ஷானா, கே.துதர்ஷன், நிகழ்ச்சித் தொகுப்பாளர் அகல்யா டேவிட், ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பெற்றோர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அம்பாறையில் மீண்டும் இடைவிட்ட மழை

## ஆறுகளின் நீர் மட்டமும் உயர்வு

(நற்பிட்டிமுனை செய்தியாளர்)

அம்பாறை மாவட்டத்தில் ஞாயிறு இரவு முதல் மழை பெய்ய ஆரம்பித்துள்ளது. பகலில் வானம் மப்பும் மந்தாரமுமாய் காணப்படுவதோடு இடைவிட்ட மழையும் பெய்து வருகிறது.

வளிமண்டலவியல் திணைக்கள அறிவித்தலால் மேலும் கனமழை பெய்து சூறாவளி ஏற்படும் வாய்ப்பு இருப்பதைக் கருத்திற்கொண்டு மக்கள் இதனை எதிர்கொள்ளத் தயாராகி வருகின்றனர்.

பிற இடங்களில் மழை பெய்வதால் கிட்டங்கி தாம்போதி ஆறு, மாவடிப்பள்ளி தாம்போதி ஆற்று நீரின் அளவும் சற்று அதிகரித்து வருகின்றது. பல கமநலப்பிரிவுகளில் உரமானியப் பணம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கடும் வெள்ளத்தால் உடைக்கப்பட்ட அணைகள் தற்போது புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தொழில் முயற்சியாளர்களுக்கு நிதி வழங்கிவைப்பு



(திராய்க்கேணி செய்தியாளர்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தொழில் முயற்சியாளர்கள் 85 பேருக்கு கொழும்பு பெட்டா பள்ளிவாசல்கள் சம்மேளனத்தினால் சுமார் 42 இலட்சம் ரூபா நிதி சனிக்கிழமை (14) பகிர்ந்தளிக்கப்பட்டது.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை மற்றும் கொழும்பு மாவட்டப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் வழிகாட்டலில் கொழும்பு பெட்டா பள்ளிவாசல்கள் சம்மேளனத்தினால் சேகரிக்கப்பட்ட நிதித் தொகையே பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் அட்டாளைச்சேனைக் கிளையின் ஒருங்கிணைப்பிலும் அதன் தலைவர் யூ.எல்.நியாஸி தலைமையிலும் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கொழும்பு பெட்டா பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் மௌலவி எல்.எம்.லமீர் ஹாபீழ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

மேலும், அட்டாளைச்சேனை ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ.எல்.ஹனீஸ், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் அட்டாளைச்சேனைக் கிளையின் செயலாளர் நஸீர், கொழும்பு பெட்டா பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் செயலாளர் ஏ.எச்.எம்.நஸார், பொருளாளர் எம்.எஸ்.எம்.இஸாம் உள்ளிட்ட நிர்வாக சபை உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு பாதிக்கப்பட்ட தொழில் முயற்சியாளர்கள் ஒவ்வொருவருக்கும் அதிதிகள் 50 ஆயிரம் ரூபா வீதம் பணம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# வை.எம்.எம்.ஏ.பேரவையின் ஏற்பாட்டில் புலமைப்பரிசில் வழங்க நேர்முகப் பரீட்சை







(அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்)

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டத்தில் 2024ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்றது.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தலைவர் சட்டத்தரணி அம்ஹர் ஷரீபின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கமைவாக பேரவையின் புலமைப் பரிசில் குழுத் தலைவர் றிஸ்வி பாறூக்கின் நெறிப்படுத்தலில் செயலாளர் மக்காரிம் ஏ.தாஹா தலைமையில் சனிக்கிழமை(14) பாலமுனை அல்-ஹிதாயா மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் முன்னாள் தலைவர்களான சுபையிர் ஹசன், எம்.ரீ.தாசிம், உப தலைவர் எம்.ஆர்.எம்.சியாத் ஆகியோர் கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் இருந்து வருகைதந்து நேர்முகப் பரீட்சையை நடத்தினர்.

நேர்முகப் பரீட்சை சிறப்பாக நடைபெறுவதற்கு அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் அதிபர் எம்.ஐ.எம்.றியாஸ், பாலமுனை, சாய்ந்தமருது, இறக்காமம் வை.எம்.எம்.ஏகளின் தலைவர்களான ஐ.ஏ.ஸிறாஜ், ஏ.ஜீ.அன்வர், எம்.ரீ.எம்.தௌபீக், வை.எம்.எம்.ஏ கல்முனை செயலாளர் எம்.எம்.ஜெஸ்மீர் பெரிதும் ஒத்துழைப்பு வழங்கினர்.

புலமைப்பரிசில் பெறுவதற்காக அம்பாறை மாவட்டத்திலிருந்து இவ்வாண்டு க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் சித்தியடைந்து க.பொ.த.உயர்தரத்தில் கல்வி பயிலும் 99 மாணவர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றினர். இதேவேளை, அன்றைய தினம் காலை மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களுக்கான நேர்முகப்பரீட்சை காத்தான்குடி மெத்தைப்பள்ளி வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் 79 மாணவர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றினர். இதற்கான ஒழுங்கமைப்பை அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் மட்டக்களப்பு மாவட்டப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.பாறூக் மேற்கொண்டார்.

அகில இலங்கை ரீதியாக புலமைப்பரிசில் பெறுவதற்காக 800 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. நேர்முகப் பரீட்சையிலிருந்து தெரிவுசெய்யப்படும் 250 மாணவர்களுக்கு வை.எம்.எம்.ஏ.பேரவையினால் இரு வருடங்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காத்தான்குடியில் 'கிறீன் காத்தான்குடி' அமைப்பு உதயம்

(காத்தான்குடி மேலதிக செய்தியாளர்)

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் சிந்தனையில் உதித்த கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தைப் போன்று காத்தான்குடி நகரசபைப் பிரிவில் சுத்தம், சுகாதாரத்தைப் பேணி தூய்மையான வாழ்க்கைத் திட்டத்தை அறிமுகப்படுத்தும் நோக்கில் 'கிறீன் காத்தான்குடி' எனும் அமைப்பு உதயமாகியுள்ளது.

அதன் அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றபோது நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவராக ரீ.எல்.ஜவ்பர்கான், சிரேஷ்ட பிரதித் தலைவராக கே.எம்.நிலாம், உபதலைவர்களாக ஏ.எம்.எம்.பஷீர், எம்.சி. ஜலாலுதீன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பொதுச் செயலாளராக எச்.எம். இக்பால்கான், உப செயலாளர்களாக ஏ.எம்.எம்.நவாஸ், எம்.ஏ.றஸீட் ஆகியோரும் பொருளாளராக ஏ.எல்.எம்.மீராசாஹிப், பணிப்பாளர்களாக யூ.எல்.நஸீர்தீன், எம்.முகைதீன் சாவி, எம்.ஐ.கமால்தீன், கே.எல்.எம்.அனீஸ், எம்.ஐ.எம்.ஹாரிஸ், ஏ.எம்.எம்.நஸீர் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

# ரணவீம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காரைதீவில் வீடுகள் கையளிப்பு



(மாளிகைக்காடு செய்தியாளர்)

காரைதீவு பிரதேச செயலக சமுர்த்தி பிரிவினால் 'ரணவீம' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காரைதீவு 4ஆம், 09ஆம் கிராம சேவகர் பிரிவுகளில் நிறைவடைந்த வீடுகளைத் திறந்து வைக்கும் நிகழ்வு காரைதீவு பிரதேச செயலாளர் ஜீ. அருணன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவஞானம் ஜெகராஜன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு ரணவீம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளைத் திறந்து வைத்தார்.

இதன்போது காரைதீவு பிரதேச உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.பார்த்திபன், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம்.அச்சு முஹமட், பிரதேச செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் ரீ.தவேந்திரன், பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# நாவிதன்வெளி தபாலகம் மீண்டும் அதே இடத்தில் இயங்க நடவடிக்கை

## பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திரா முன்னெடுப்பு

(புளியந்தீவு செய்தியாளர்)

நாவிதன்வெளி தபாலகம் தற்போது சவளக்கடை தபாலகத்தில் இயங்கி வருகிறது. இன்னும் ஓரிரு நாட்களில் அது நாவிதன்வெளிக்கு மாற்றப்படுமென வெளிநாட்டு விவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திரா தெரிவித்தார்.

இப்பகுதியின் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் ரூபசாந்தன் தலைமையிலான பிரதிநிதிகள் இது தொடர்பில் பிரதியமைச்சரிடம் எடுத்துக் கூறியபோதே அவர் தீர்வு பெற்றுத்தருவதாக உறுதியளித்தார்.

இது தொடர்பில் சங்கத்தினர் தெரிவிக்கையில்,

''நாவிதன்வெளி தபாலகம் ஏழு தசாப்தங்களாக இயங்கி வருகின்ற ஒரு ஸ்தாபனம். அதில் நிர்வாகத் தவறுகள் ஏற்பட்டால் அதற்கு பொதுமக்கள் காரணமாக இருக்கப்போவதில்லை. இதனை தபால் திணைக்களம் உணரவேண்டும். ஏதோ தவறு ஏற்பட்டதற்காக அந்தத் தபாலகம் இரண்டு கிலோமீற்றருக்கப்பால் அமைந்துள்ள சவளக்கடை தபாலகத்தோடு இணைக்கப்பட்டு தபாலக நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதனால் நாவிதன்வெளி பிரதேச மக்கள் தங்கள் தபாலக தேவையை நிறைவேற்றிக்கொள்ள சவளக்கடைக்கு பயணிக்கவேண்டியுள்ளது.

வயதான ஏழைகளுக்கு வழங்கப்படும் சகாயப் பணம்கூட பெறுவதற்கு அங்கு செல்ல வேண்டும். இதற்காக முச்சக்கரவண்டிக்கு ஒரு தொகையை கொடுக்க வேண்டும். சிலருக்கு கிடைக்கின்ற சகாயப் பணம் முச்சக்கரவண்டிக்கே போதுமானதாக இருக்கும். இதனால் பொதுமக்கள் மிகுந்த வேதனைப்படுகிறார்கள். இவ்வாறான துன்பங்கள், நஷ்டங்களை எதிர்கொள்ள முடியாது'' - என்றனர்.

அதன்பின்னர் பிரதியமைச்சர் கிழக்கு மாகாண தபால் மா அதிபரோடு தொடர்பு கொண்டு நாவிதன்வெளி தபாலகத்தை பழைய இடத்திலேயே இயங்கவைக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# நல்லாட்சிக்கான தேசிய முன்னணி எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தனித்துப் போட்டி

## எவருடனும் கூட்டுச்சேரப் போவதில்லை என்கிறார் தலைவர் அப்துல் ரஹ்மான்

(சீனக்குடா செய்தியாளர்)





எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியுடனோ அல்லது வேறு எந்த அணியுடனுமோ கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவதில்லை என கட்சி தீர்மானித்துள்ளதால் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தனித்தே போட்டியிடுமென கட்சித் தலைவர் எம்.எம்.அப்துல் ரஹ்மான் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்சியின் நிலைப்பாடு குறித்து திருகோணமலை மாவட்ட, கிண்ணியா பிரதேச செயற்குழு உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை(15) கிண்ணியாவில் இடம்பெற்றது. இதன்போது, ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

''2019 ஆம் ஆண்டு தேசிய மக்கள் சக்தியுடன் ஒரு பங்காளிக் கட்சியாக இருந்தோம். இலங்கை அரசியலில் மூன்றாவது சக்தியொன்றின் அவசியம் இருந்ததனால் அவர்களோடு அன்று இணைந்து நாங்கள் பயணித்தோம். 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் சில புரிந்துணர்வு இன்மையால் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிடக் கூடிய வாய்ப்பு எங்களுக்கு கிடைக்கவில்லை. இந்த நிலையில், கடந்த ஜனாதிபதித் தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. எங்களுக்கு கிடைத்த தகவல்களை அறிவுபூர்வமாக ஆராய்ந்து, NPP அல்லாத ஒரு கட்சிக்கு நாங்கள் ஆதரவு தெரிவிக்க வேண்டிய நிலைக்கு ஆளானோம்.

இதன் காரணமாக சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளித்தோம். அதன் பிறகு நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலில் நாங்கள் தனியாகப் போட்டியிட்டோம். கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தனியாகப் போட்டியிட்டிருந்தோம். இங்கு கிண்ணியா நகர மற்றும் பிரதேச சபைகளில் இரண்டு உறுப்பினர்களைப் பெற்றுக் கொண்டோம்.

மாற்றத்தை விரும்பிய மக்கள், தற்போது ஒரு புதிய ஆட்சியைத் தோற்றுவித்திருக்கிறார்கள். இதன் மூலம் இலங்கையின் பாரம்பரிய அரசியல் தற்போது மாற்றத்துக்கு உள்ளாகியுள்ளது. மக்களின் சிந்தனை ஓர் அரசியல் புரட்சியாக மாற்றம் பெற்றிருக்கின்றது என்பதை கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்கள் நிரூபித்திருக்கின்றன. இதனை ஒரு சிந்தனைப் புரட்சியாகவே நல்லாட்சிக்கான தேசிய முன்னணி பார்க்கின்றது. கடந்த 18 வருடங்களாக இந்த மாற்றத்துக்காகவே எமது கட்சி உழைத்து வந்திருக்கின்றது என்பதையும் இங்கு நினைவூட்ட விம்புகிறேன். எங்களுடைய அரசியல் கொள்கையும் மக்கள் நலன் சார்ந்த அரசியலை முன்னெடுப்பதே.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் எங்களை அங்கீகரிப்பார்கள் என நம்புகிறோம். NFGG க்கு வாக்களிப்பதானது ஓர் அறிவு சார்ந்த சிந்தனையாகும். அதன் பலனை மக்கள் விரைவில் கண்டுகொள்ளக்கூடிய வாய்ப்புக் கிடைக்குமென்றும் தெரிவித்தார்.

# கல்முனை மாநகர சபைக்கு மருதமுனை அனர்த்த முகாமைத்துவக் குழு பாராட்டு



(சாய்ந்தமருது செய்தியாளர்)

கடந்த வெள்ளப்பெருக்கின்போது கல்முனை மாநகர சபை முன்னெடுத்த அனர்த்தக் கட்டுப்பாடு மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மருதமுனை அனர்த்த முகாமைத்துவக் குழு பாராட்டியுள்ளது.

மருதமுனை அனர்த்த முகாமைத்துவக் குழுவின் பிரதிநிதிகள் அதன் தலைவர் எவ்.எம்.ஏ.அன்ஸார் மௌலானா தலைமையில் வெள்ளிக்கிழமை (13) கல்முனை மாநகர சபைக்கு விஜயம் செய்து உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீமை சந்தித்து - மாநகர ஆணையாளர் என்.எம்.நௌபீஸுக்கு முகவரியிடப்பட்ட பாராட்டுக் கடிதத்தைக் கையளித்தனர்.

கடந்த நவம்பர் மாதம் பிற்பகுதியில் தாழமுக்கம் காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு அனர்த்தத்திலிருந்து மக்களையும் சொத்துகளையும் பாதுகாப்பதற்காக கல்முனை மாநகர சபையானது துரிதமாகச் செயற்பட்டு மிகவும் அர்ப்பணிப்புடன் இரவு பகலாக இப்பணிகளை சிறப்பாக முன்னெடுத்திருந்தமை மிகவும் போற்றத்தக்க பணியாகுமென்று பாராட்டியுள்ள மருதமுனை அனர்த்த முகாமைத்துவக்குழு, இச்சேவைக்காக மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, எதிர்கால அனர்த்தங்களைக் கருத்திற்கொண்டு மருதமுனை பிரதேசத்தில் மேலதிகமாக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் பல்வேறு முன்மொழிவுகளை மருதமுனை அனர்த்த முகாமைத்துவக் குழுவினர் இதன்போது கல்முனை மாநகர சபையிடம் சமர்ப்பித்து அவற்றைக் கூடிய விரைவில் நிறைவேற்றித் தருமாறு வலியுறுத்தியுள்ளனர்.

# ஜும்ஆ தினங்களில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களை நடத்துவதை தவிர்க்கவும்

## உதுமாலெப்பை எம்.பி. கோரிக்கை





(மீனோடைக்கட்டு செய்தியாளர்)

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஜும்ஆ தினங்களில் நடத்துவதில்லையென்று அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவராக பதவி வகித்த காலத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கும் நிலையில், ஜும்ஆ தினத்தில் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இது குறித்து தனது கண்டனத்தை அம்பாறை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதியமைச்சர் வசந்த பியதிஸ்ஸ தலைமையில் வெள்ளிக்கிழமை(13) நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜும்ஆ தினத்தில் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் முஸ்லிம் திணைக்களத் தலைவர்களும் பல கஷ்டங்களை எதிர் நோக்கவேண்டியுள்ளதுடன் எதிர்காலங்களில் ஜும்ஆ தினங்களில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்துவதை தவிர்க்குமாறும் வேண்டிக் கொண்டார்.

இதற்குப் பதிலளித்த பிரதியமைச்சர் வசந்த பியதிஸ்ஸ மற்றும் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம ஆகியோர் எதிர்வரும் காலங்களில் வெள்ளிக்கிழமை தினங்களில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்படுவதை தவிர்த்துக் கொள்வதாகவும் இது தொடர்பாக ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துவதாகவும் தெரிவித்தனர்.

# இந்திய அமைச்சர்களை சந்தித்தார் ஜனாதிபதி அநுர

## இலங்கையில் பொருளாதார மறுமலர்ச்சிக்கு இந்திய சந்தையை பயன்படுத்திக்கொள்வது குறித்து பேச்சுவார்த்தை





இந்தியாவுக்கான மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தங்கியிருக்கும் புதுடில்லி ITC MAURYA ஹோட்டலுக்கு வருகைத் தந்த இந்திய நிதி மற்றும் நிறுவன அலுவல்கள் அமைச்சர் நிர்மலா சீதாராமன், வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் மற்றும் இந்திய பாதுகாப்பு ஆலோசகர் ஸ்ரீ அஜித் தோவால் ஆகியோர் ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தியா – இலங்கை பொருளாதார ஒத்துழைப்புக்களை பலப்படுத்திக்கொள்ளல் மற்றும் இருநாடுகளுக்கும் இடையிலான முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்திக்கொள்வது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் இந்திய நிதி, நிறுவன அலுவல்கள் அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அதேநேரம் இந்திய சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அதிகளவில் அழைத்து வருவது மற்றும் இலங்கையின் விவசாய நவீனமயமாக்கல், டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு சிநேகபூர்வமாக இடம்பெற்றதோடு, இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு இந்தியாவின் மிகப்பெரிய சந்தையை பயன்படுத்திக்கொள்வது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், இந்நாட்டின் சுற்றுலா, முதலீடு மற்றும் வலுசக்தி துறைகளில் ஒத்துழைப்பு வழங்குவதற்கும் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் இதன்போது இணக்கம் தெரிவித்தார்.

மீன்பிடித்துறை மற்றும் தேசிய ஒறுமைப்பாடு உள்ளிட்ட இருநாடுகளுக்கும் அன்னியோன்யமான விடயங்கள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

அதனையடுத்து இந்திய பாதுகாப்பு ஆலோசகர் ஸ்ரீ அஜித் தோவால் (Shri Ajith Doval) ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்து வலயத்தின் பாதுகாப்பு குறித்து கலந்துரையாடினார்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ உள்ளிட்டோரும் இதன்போது கலந்துகொண்டனர்.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் பலி

அநுராதபுரம் நிருபர்

அநுராதபுரம்- விளச்சிய வீதி லோலுகஸ் வெவ பகுதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விளச்சிய வீதி லோலுகஸ்வெவ பகுதியில் நேற்று முன்தினம் (15) பகல் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றதாக அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

லோலுகஸ்வெவ, அநுராதபுரம் பகுதியை வசிப்பிடமாக கொண்ட 62 வயதுடைய ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

விளச்சிய வீதியின் லோலுகஸ்வெவ பகுதியிலிருந்து பசவக்குளம் பகுதிக்கு சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதியே இவ்விபத்து சம்பவித்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலையப் போக்குவரத்து பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இராஜாங்கனையில் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

அநுராதபுரம் நிருபர்

அநுராதபுரம், இராஜாங்கனை பகுதியில் போதைப்பொருட்களை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதாக இராஜாங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் (15) இரவு இராஜாங்கனை பொலிஸ் பிரிவின் யாய 17 பஹல மாரகஹவெவ பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபரை கைதுசெய்துள்ளதுடன், 46 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளையும் 18 கிராம் 450 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் 46 வயதுடைய பஹல மாரகஹவெவ பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணை செய்வதற்காக நீதிமன்ற தடுப்புக் காவல் உத்தரவு பெறப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இராஜாங்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழர்களுக்கு தொண்டாற்றப் பிறந்தவர் மனோ எம்.பி.

## ஜனநாயக மக்கள் முன்னணியின் கம்பஹா மாவட்டத் தலைவர் சசிகுமார்



"இன்று தனது 65 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்" - என ஜனநாயக மக்கள் முன்னணியின் கம்பஹா மாவட்டத் தலைவர் சுப்ரமணியம் சசிகுமார் தெரிவித்தார்.

இது குறித்து தனது வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

டிசம்பர் 17, 1959 ஆம் ஆண்டு பிறந்த, மனோ கணேசன் , இலங்கைத் தமிழ் அரசியல்வாதியும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமாவார்.

இவர் 2015 செப்டெம்பர் 04 முதல் 2019 நவம்பர் வரை தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய துறை அமைச்சராகப் பணியாற்றினார்.

மனோ கணேசன் பிரபல தமிழ் தொழிற்சங்கவாதியும் திரைப்பட நடிகரும் தயாரிப்பாளருமான மறைந்த வி. பி. கணேசனின் மகனும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசனின் உடன்பிறந்தவருமாவார்.

அவர் கண்டி புனித அந்தோனியார் கல்லூரி, கொழும்பு வெஸ்லி கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றார்.

மனோ கணேசன் முதன் முதலில் மேல் மாகாண சபை உறுப்பினராக அரசியலில் குதித்தார். பின்னர் பாராளுமன்றத்துக்கு முதன் முதலில் 2001 தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். தொடர்ந்து 2004 தேர்தலில் தனது ஜனநாயக மக்கள் முன்னணியின் சார்பில் ஐக்கிய தேசிய முன்னணி கூட்டணியில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

2010 தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி கூட்டணியில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டு தேர்தல் வன்முறை காரணமாக வெற்றியை இழந்தார்.

அதன் பின், மனோ கணேசன் கொழும்பு மாநகரசபை, மேல் மாகாணசபை ஆகியவற்றில் போட்டியிட்டு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மீண்டும் எழுந்து வந்தார்.

மனோ கணேசன் 2015 அரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட்ட எதிரணியின் பொது வேட்பாளரான மைத்ரிபால சிறிசேனவுக்குத் தனது ஆதரவைத் தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டில் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன், தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் ஆகியோருடன் இணைந்து தமிழ் முற்போக்குக் கூட்டணி என்ற கூட்டமைப்பை ஆரம்பித்து, அதன் தலைவராக தெரிவு செய்யபட்டார். இக்கூட்டணி 2015 பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி சின்னத்தில் போட்டியிட்டு ஆறு இடங்களைக் கைப்பற்றியது.

2010 வருட அனுபவங்களின் பின் தனது கடும் முயற்சி, நேர்மை, துணிச்சல், அர்ப்பணிப்பு, தூரப்பார்வை, மொழிவல்லமை காரணமாக சாம்பலில் இருந்து ஃபீனிக்ஸ் பறவை போல எழுந்து வந்தார்.

இதன்படி, 2015 ஆம் ஆண்டில், மனோ கணேசன் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்று, மாகாண சபையில் இருந்து நேரடியாக அமைச்சரவை அமைச்சராக மீண்டும் பாராளுமன்றம் சென்று சாதனையை நிலை நாட்டினார்.

மைத்ரிபால சிறிசேன அமைச்சரவையில் இவரது அமைச்சின் கீழ் அரச மொழிகள் திணைக்களம், அரச மொழிகள் ஆணைக்குழு, தேசிய மொழிப்பயிலகம், அரசு சாரா நிறுவன செயலகம், இந்து கலாசார திணைக்களம், காணாமல் போனோர் அலுவலகம் ஆகிய அரச திணைக்களங்கள் இருந்தன. 2019 நவம்பரில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

2020 பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டது. மனோ கணேசன் கொழும்பு மாவட்டத்தில் மீண்டும் தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்றம் சென்றார்.

2024 பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் முற்போக்குக் கூட்டணி மீண்டும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்து ஐக்கிமக்கள் சக்தியின் தொலைபேசிச் சின்னத்தில் போட்டியிட்டது. மனோ கணேசன் கொழும்பு மாவட்டத்தில் வெற்றி பெறவில்லை. இவர் ஐக்கிய மக்கள் கூட்டணியில், தமிழ் முற்போக்கு கூட்டணியினது தேசியப் பட்டியலில் இடம்பிடித்து மீண்டும் பாராளுன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கு அமெரிக்காவின் விடுதலைக் காப்பாளர் விருது (Freedom Defender's Award) மனித உரிமைகளுக்காக மனோ கணேசனுக்கு வழங்கப்படுவதாக 2007 டிசம்பர் 10 இல் அமெரிக்காவின் அப்போதைய அரசுச் செயலாளர் காண்டலீசா ரைஸ் வாஷிங்டன், டி. சியில் அறிவித்தார்.

இத்தகைய அரசியல் வழி பாதையை கொண்டவரும் தற்போது தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளஹருமான தலைவர் மனோ கணேசன் எமது தமிழ் மக்களுக்கு சிறந்த தொண்டாற்றி மென்மேலும் வளர வேண்டுமென கம்பஹா மாவட்ட தமிழ் மக்கள் சார்பாக வாழ்த்து தெரிவித்துக்கொள்கிறேன் எனவும் தெரிவித்துள்ள

# கொள்ளுப்பிட்டியில் அடையாளம் தெரியாத நபரொருவரின் சடலம் மீட்பு

கொள்ளுப்பிட்டியில் உள்ள DSI கட்டிடத்துக்கு அருகில் அடையாளம் தெரியாத சடலம் ஒன்று நேற்றுமுன்தினம் (15) கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டிடத்தின் தாழ்வாரத்தில் நேற்று முன்தினம் (15) காலை குறித்த சடலம் கண்டெடுக் கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் 65 முதல் 70 வயதுக்கு இடைப்பட்டவராகவும் 05 அடி 08 அங்குல உயரம் கொண்டவராகவும் காணப்படுகிறார்.

சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வவுனியா மாவட்ட பண்பாட்டு பெருவிழா




வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட செயலகமும் வவுனியா மாவட்ட பண்பாட்டு பேரவையும் இணைந்து நடத்திய வவுனியா மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலாளர் பீ.ஏ.சரத்சந்திர பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இதன்போது, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன், ஆக்க இலக்கியத் துறைக்கான வவுனியம் விருது ஊடகவி யலாளர் சிவகுமார் திவியந்தினிக்கும் மேலும் 6 பேருக்கு வவுனியம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





ஸ்ரீ ஹரிஹரசுதன் யாத்திரை குழு குரு சுவாமி ஆறுமுகம் ரவீந்திரனின் 60ஆவது பிறந்த நாள் அன்று கொழும்பில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் ஐயப்ப சுவாமியின் மகா சக்தி பூஜை சிறப்பாக நடைபெற்றது. விழாவிக்கு துறவி குரு சுவாமி வருகை தந்து பூஜைகளை செய்தார். பதினெட்டாவது சபரிமலை செல்லும் சுவாமிமார்களுக்கு கௌரவம் வழங்கப்பட்டதுடன், பல குரு சுவாமிகள் குருசாமிமார்கள் பூஜை வழிபாட்டில் கலந்துகொண்டார்கள்.



# காலமானார் உலகப் புகழ்பெற்ற தபேலா மேதை ஷாகிர் உசேன்

## பாரதப் பிரதமர் மோடி இரங்கல்

உலகப் புகழ்பெற்ற தபேலா மேதை ஷாகிர் உசேன் (Zakir Hussain) உடல் நலக்குறைவால் தனது 73ஆவது வயதில் நேற்றுமுன்தினம் (15) காலமானார். அவரது மறைவை குடும்பத்தினர் உறுதி செய்துள்ளனர்.

இது தொடர்பாக அவரது குடும்பத்தினர், "ஷாகிர் உசேன் இரண்டு வாரங்களாகவே அமெரிக்காவின் சான்பிரான்ஸிஸ்கோ நகர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். அவரது உடல்நிலை மேலும் மோசமடைந்ததால் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில் அவர் நுரையீரல் பிரச்சினையின் காரணமாக உயிரிழந்தார்" எனத் தெரிவித்துள்ளனர்.

**மோடி இரங்கல்**

தபேலா மேதை ஷாகிர் உசேனின் மறைவுக்கு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் (ட்விட்டர்) பதிவில்,

"புகழ்பெற்ற தபேலா கலைஞர் ஷாகிர் ஹுசைன் மறைவுக்கு ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய பாரம்பரிய இசை உலகில் புரட்சியை ஏற்படுத்திய மேதையாக அவர் நினைவுகூரப்படுவார்.

அவர் தனது இணையற்ற தாளத்தால் கோடிக்கணக்கானவர்களைக் கவர்ந்து தபேலாவை உலக அரங்குக்கு கொண்டு வந்தார். இதன்மூலம், உலகளாவிய இசையுடன் இந்திய பாரம்பரிய மரபுகளை தடையின்றி கலக்கினார்.

இதனால் கலாசார ஒற்றுமையின் சின்னமாக மாறினார். அவரது சின்னச் சின்ன நிகழ்ச்சிகள் மற்றும் ஆத்மார்த்தமான இசையமைப்புகள் இசையமைப்பாளர்கள் மற்றும் இசை ஆர்வலர்களின் தலைமுறைகளை ஒரே மாதிரியாக ஊக்குவிக்கும். அவரது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் உலக இசை சமூகத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

***வாழ்க்கை வரலாறு***

உஸ்தாத் ஷாகிர் உசேன் 1951ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் திகதி மும்பையில் பிறந்தார். இவரது தந்தை பிரபல இசைக் கலைஞர் அல்லா ராக்கா. மகனுக்கு 03 வயது முதலே தபேலா கற்பித்தார். பிறவி மேதையான ஷாகிர் உசேன் 5ஆவது வயதில் தபேலா வாசிக்கத் தொடங்கினார்.

இளமைப் பருவம் மும்பையிலேயே கழிந்தது. செயின்ட் சேவியர் கல்லூரியில் பட்டம் பெற்றார். ''என் அடிச்சுவட்டில் தபேலா வாசித்தாலும் உனக்கென்று தனியான அடையாளத்தை ஏற்படுத்திக்கொள்'' என்றார் தந்தை. அவரது ஆசைப்படியே, தபேலா இசையில் தனி முத்திரை பதித்தார்.

இசைப் பயணம் மேற்கொள்வதை 11ஆவது வயதில் தொடங்கினார். 1970இல் இசை நிகழ்ச்சி நடத்த அமெரிக்கா சென்றார். அதுமுதல் இவரது சர்வதேச இசைப் பயணம் தொடங்கியது. இந்தியாவில் மட்டுமின்றி, உலகம் முழுவதும் இவரது இசை ஒலிக்கத் தொடங்கியது. ஆண்டுக்கு 150இற்கு மேற்பட்ட இசை நிகழ்ச்சிகளை நடத்தினார்.

'லிவிங் இன் தி மெட்டீரியல் வோர்ல்ட்' என்ற இவரது முதல் இசை ஆல்பம் 1973இல் வெளிவந்தது. தொடர்ந்து பல ஆல்பங்களை வெளியிட்டார். இவரது 'மேக்கிங் மியூசிக்', கிழக்கு - மேற்கு ஃப்யூஷன் வகையின் தலைசிறந்த எல்பமாக கருதப்படுகிறது.

உலகப் புகழ்பெற்ற இசைக் கலைஞர்களுடன் கூட்டாக சேர்ந்து பல இசைக் குழுக்களை நிறுவியவர். ஹொங்கொங் சிம்பொனி, நியூஆர்லியன்ஸ் சிம்பொனி ஆகியவற்றிலும் பங்கேற்றுள்ளார். அமெரிக்க இசைக் கலைஞர் பில் லொஸ்வெல்லுடன் இணைந்து 'தபேலா பீட் சயின்ஸ்' என்ற பிரம்மாண்ட இசைக் குழுவை நிறுவினார்.

'வானப்பிரஸ்தம்' என்ற மலையாளத் திரைப்படத்துக்கு இசையமைத்து, அதில் நடித்தார். இஸ்தான்புல் சர்வதேச திரைப்பட விழா, மும்பை சர்வதேச திரைப்பட விழா, தேசிய திரைப்பட விருது விழா ஆகியவற்றில் இது விருதுகளைக் குவித்தது.

'இன் கஸ்டடி', 'தி மிஸ்டிக் மஸார்' உட்பட பல திரைப்படங்களுக்கு இசையமைத்துள்ளார். பல திரைப்படங்கள், ஆவணப் படங்களிலும் தனியாகவும் பல்வேறு இசைக் குழுவினருடன் சேர்ந்தும் இசையமைத்துள்ளார். ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் வருகைதரு பேராசிரியராகவும் பணியாற்றியவர்.

பல திரைப்படங்களில் நடித்துள்ளார். 'ஷாகிர் அண்ட் ஹிஸ் ஃப்ரெண்ட்ஸ்' திரைப்படமும் 'தி ஸ்பீக்கிங் ஹேண்ட்: ஷாகிர் உசேன் எண்ட் தி ஆர்ட் ஒவ் தி இந்தியன் ட்ரம்' ஆவணத் திரைப்படமும் பிரபலமானவை.

பத்மஸ்ரீ விருதை 37 வயதில் பெற்றார். 1992இல் 'கிராமி' விருது பெற்றார். தாளவாத்தியப் பிரிவுக்கு முதன்முதலாக வழங்கப்பட்ட விருது இது. மீண்டும் 2009ஆம் ஆண்டிலும் 'கிராமி' விருது பெற்றார். பத்ம பூஷண், சங்கீத நாடக அகாடமி உள்ளிட்ட விருதுகளையும் பெற்றுள்ளார். பாரம்பரிய இசைக்காக அமெரிக்காவில் வழங்கப்படும் கலை மற்றும் பண்பாட்டு ஃபெலோஷிப் பெற்றவர். 2023ஆம் ஆண்டு பத்ம விபூஷண் விருது பெற்றார்.

## ட்ரம்ப் தொடுத்த அவதூறு வழக்கு:

# 15 மில்லியன் டொலர்களை வழங்க ஏபிசி நியூஸ் ஒப்பந்தம்



அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தொடுத்த அவதூறு வழக்கை கைவிட, அவரின் ஜனாதிபதி ஆவண காப்பகத்துக்கு 15 மில்லியன் டொலர்களை வழங்க ஏபிசி நியூஸ் என்ற அவுஸ்திரேலிய செய்தித் தொலைக்காட்சி ஒப்பந்தம் மேற்கொண்டது.

கடந்த நவம்பரில் நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசு கட்சி வேட்பாளராக களமிறங்கிய ட்ரம்ப் வெற்றியடைந்த நிலையில் எதிர்வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதி ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ளார்.

முன்னதாக கடந்த 2023ஆம் ஆண்டு நியூயோர்க் நீதிமன்றத்தில் எழுத்தாளர் எலிசபெத் ஜீன் கரோல் தொடுத்த வழக்கில், தன்னிடம் ட்ரம்ப் பாலியல் ரீதியில் தவறாக நடந்துகொண்டதாக குற்றஞ்சாட்டினார். இந்த வழக்கில் ட்ரம்ப்பை குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஆனால், அந்தத் தீர்ப்பில் அவர் பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படவில்லை. எனினும், அவர் பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டதாக நீதிமன்றம் தீர்ப்பளித்தது என்று கடந்த மார்ச் மாதம் ஏபிசி நியூஸ் நேர்காணலொன்றில், நெறியாளர் ஜோர்ஜ் ஸ்டெஃபனாபோலஸ் தவறான தகவலை தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து தெற்கு ஃபுளோரிடா நீதிமன்றத்தில் ஜோர்ஜ் மற்றும் ஏபிசி நியூஸ் மீது ட்ரம்ப் அவதூறு வழக்கு தொடுத்தார்.

இந்நிலையில், அந்த வழக்கில் ட்ரம்ப்புக்கும் ஏபிசி நியூஸ் தொலைக்காட்சிக்கும் சமரசம் ஏற்பட்டுள்ளது. இந்த வழக்கை கைவிட அவரின் ஜனாதிபதி ஆவண காப்பகத்துக்கு 15 மில்லியன் டொலர்களையும் வழக்கு கட்டணமாக ஒரு மில்லியன் டொலர்களையும் வழங்கி, பொது மன்னிப்பை வெளியிட அந்தத் தொலைக்காட்சி முடிவு செய்துள்ளது. இதற்கான ஒப்பந்தம் கடந்த வெள்ளிக்கிழமை இருதரப்பினர் இடையே கையொப்பமானமை குறிப்பிடத்தக்கது.

# மயோட்டை சூறையாடிய சிடோ புயல்: ஆயிரக்கணக்கானோர் உயிரிழப்பு



பிரான்ஸின் நிர்வாகத்தின் கீழுள்ள மயோட் ***(Mayotte)*** தீவை 'சிடோ' ***(Chido)*** என்ற அதிபயங்கரமான புயல் தாக்கியதில் அங்கு நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. கடந்த 90 ஆண்டுகளில் இல்லாத வகையில் மிகவும் வலிமையான புயல் இது என்று கணிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான மடகஸ்காருக்கு அருகில் இந்திய பெருங்கடலில் அமைந்துள்ள சுற்றுலா தீவான மயோட், தற்போது இருந்த இடம் தெரியாமல் உருக்குலைந்துள்ளது. பிரான்ஸின் கட்டுப்பாட்டிலுள்ள இந்த மயோட் தீவில் 03 இலட்சத்து 20 ஆயிரம் பேர் வசித்துவரும் நிலையில் இத்தீவை நேற்றுமுன்தினம் சிடோ என்ற புயல் தாக்கியது.

மணிக்கு 220 கி.மீ. வேகத்தில் வீசிய சூறாவளி காற்று மொத்த தீவையும் வாரிச் சுருட்டியுள்ளது. குடியிருப்புகளா குப்பைமேடுகளா என்று ஐயம் கொள்ளுமளவுக்கு பல ஆயிரம் கணக்கான வீடுகள் புயலில் சூறையாடப்பட்டு சின்னாபின்னமாக சிதைக்கப்பட்டுள்ளன.



அத்தோடு கடும் மழையும் வெளுத்து வாங்கியது. புயலால் ஏராளமான வீடுகள் இடிந்து வீழ்ந்து தரைமட்டமாகியுள்ளன. மின்கம்பங்கள் சாய்ந்தன. அத்துடன் மின்சார விநியோகத்துக்கான மொத்த உள்கட்டமைப்புகளும் இடிந்து விழுந்துள்ளன. வீதிகள், கட்டிடங்கள் உட்பட பல்வேறு உள்கட்டமைப்புகள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் இரவு நிலைவரப்படி 11 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. 200இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்ததாக தகவல் வெளியானது. மீட்புப் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. பல வீடுகளின் இடிபாடுகளில் சிக்கியவர்கள் இன்னும் மீட்கப்படாமலுள்ளனர். எனவே,



புயல், மழையால் சுமார் 1,000 பேர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

ஒரே நாளில் மொத்த மக்களும் உணவு, குடிநீருக்கு அலையும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். விமான நிலையமும் சேதமடைந்துள்ளது. தகவல் தொடர்பு நிலையங்கள் பெரும் சேதத்தை சந்தித்துள்ளன.

இதுபற்றி மயோட் நிர்வாகி பிரான்காயிஸ் சேவியர் பியூவில்லி தெரிவிக்கையில், புயல் மழைக்கு பலியானோரின் எண்ணிக்கை ஆயிரத்தை நெருங்கலாம். இறந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் சரியான எண்ணிக்கையை கணிப்பது மிகவும் கடினமாகவுள்ளது - என்றார்.

# ஹசீனாவின் ஆட்சியில் 3,500 பேர் மாயம்



பங்களாதேஷில் ஷேக் ஹசீனாவின் ஆட்சிக்காலத்தில் 3,500இற்கும் மேற்பட்டோர் வலுக்கட்டாயமாக காணாமலாக்கப்பட்டுள்ளதாக விசாரணைக்குழு அறிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர் போராட்டம் காரணமாக தமது பதவியை துறந்து நாட்டை விட்டு வெளியேறிய பங்களாதேஷ் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா இந்தியாவில் தஞ்சமடைந்த நிலையில் பங்களாதேஷ் பொருளாதார நிபுணர் டொக்டர் முஹமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைந்துள்ளது.

இந்நிலையில், ஷேக் ஹசீனா ஆட்சியில் ஏராளமானோர் வலுக்கட்டாயமாக காணாமலாக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு, வலுக்கட்டாயமாக காணாமல் போனவர்கள் பற்றி விசாரணை நடத்த உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி மைனுல் இஸ்லாம் சௌத்ரி தலைமையில் ஐந்து பேர் அடங்கிய குழுவை அமைத்தது. இதையடுத்து, விசாரணைக்குழு நேற்று முன்தினம் அறிக்கையை சமர்ப்பித்தது.

அதில், "ஷேக் ஹசீனா ஆட்சியில் 3,500இற்கும் மேற்பட்டோர் வலுக்கட்டாயமாக காணாமலாக்கப்பட்டுள்ளனர். இதுதொடர்பாக 1,676 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதுவரை 758 முறைப்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. அதில் 200 பேர் அல்லது 27 சதவீதம் பேர் திரும்பி வரவில்லை. திரும்பி வந்தவர்களில் பெரும்பாலானோர் கைது செய்யப்பட்டவர்களின் பட்டியலிலுள்ளனர். வலுக்கட்டாயமாக காணாமலாக்கப்படும் சம்பவங்களின் பின்னணியில் ஷேக் ஹசீனா உள்ளார்.

ஷேக் ஹசீனாவின் பாதுகாப்பு ஆலோசகராக இருந்த மேஜர் ஜெனரல் தாரிக் அஹமது சித்தீக், தேசிய தொலைத்தொடர்பு கண்காணிப்பு மைய முன்னாள் இயக்குநர் ஜியாவுல் அஹ்சனந்த் மற்றும் பிற பொலிஸ் மூத்த அதிகாரிகள் இந்த சம்பவங்களில் ஈடுபட்டது கண்டறியப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காஸாமீதான இஸ்ரேல் தாக்குதலில் பலஸ்தீனர்கள் 45,028 பேர் உயிரிழப்பு



காஸாமீதான இஸ்ரேல் தாக்குதலில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 45,000ஐ கடந்துள்ளது. இதேவேளை நேற்று (16) 24 மணிநேரத்துக்கு இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் பலஸ்தீனர்கள் 57 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 203 பேர் காயமடைந்துள்ளதாக காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான போர் கடந்த ஆண்டு ஒக்டோபர் 07ஆம் திகதி தொடங்கிய நிலையில் இப்போர் இன்று ஓராண்டை கடந்தும் நீடித்து வருகிறது.

இந்நிலையில், காஸாமீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் தாக்குதல்களில் இதுவரை 45,028 இற்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 106,962 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில், நேற்று தெற்கு காஸா பகுதியிலுள்ள கான் யூனிஸ் நகருக்கு அருகிலுள்ள பாடசாலையொன்றின்மீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது. குறித்த பாடசாலையில் போரால் வீடுகளை இழந்த பலஸ்தீன மக்கள் முகாமிட்டு தங்கியிருந்த ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரண முகாம் என தெரிவிக்கப்படுகிறது. இத்தாக்குதலில் குழந்தைகள் உட்பட 43 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அதேபோல, இஸ்ரேலிய இராணுவம் வடக்கு காஸா பகுதியில் நடத்திய தாக்குதலில் பல குடியிருப்புக் கட்டடங்கள் இடிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சிரியா விவகாரம்:

# ட்ரம்ப் - நெதன்யாஹு கலந்துரையாடல்




அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ட்ரம்ப் சிரியா விவகாரம் குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹுவுடன் கலந்துரையாடியுள்ளார்.

இதுகுறித்து நெதன்யாஹு தெரிவிக்கையில்,

காஸா பகுதியில் ஹமாஸ் பிடியிலுள்ள இஸ்ரேல் மற்றும் வெளிநாட்டுப் பணயக் கைதிகளை விடுவிப்பது குறித்து இருவரும் ஆலோசித்தோம்.

சிரியாவுடன் மோதலில் ஈடுபட விரும்பவில்லை என்றும் அந்நாட்டிலிருந்து வரக்கூடிய அச்சுறுத்தல்களை முறியடிப்பதற்கும் எல்லைப் பகுதியை பயங்கரவாத சக்திகள் கைப்பற்றுவதைத் தடுக்கவுமே தற்காப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நெதன்யாஹு தெரிவித்தார்.

# இளவாலையில் விபத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு!

இளவாலை பகுதியில் நேற்று முன்தினமிரவு (15) இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் அவரது மகன் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பெரியவிளான் பற்றிமா தேவாலயத்துக்கு அருகில் வசிக்கும் மோ.பாக்கியநாதன் (வயது 76) என்பவரே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

மேற்குறித்த இருவரும் நேற்று முன்தினமிரவு (15) 9.30 மணியளவில் பெரியவிளான் பற்றிமா தேவாலயத்துக்கு அருகாமையில் வீதியில் நின்றிருந்தனர். இதன்போது வந்த தனியார் பேருந்து இருவரையும் மோதியுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த இருவரும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இருப்பினும் சிகிச்சை பலனின்றி தந்தை உயிரிழந்துள்ளார். மகன் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

பேருந்தின் சாரதி தப்பிச் சென்ற நிலையில் பேருந்தை எடுத்துச் சென்ற இளவாலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# சம்பளம் வழங்க முன்னரே ஆசிரியர்களிடம் கையொப்பம்; வடக்கில் புதிய நடைமுறையா?

**ஆசிரியர்கள் விசனம்**

(பு.கஜிந்தன்)

இலங்கையில் ஏனைய மாகாணங் களின் கீழ் இயங்கும் கல்வித் திணைக்களங்களில் ஆசிரியர்களுக்கான சம்பளங்கள் வழங்கப்பட்ட பின்னரே சம்பளப் பட்டியலில் கையொப்பம் பெறப்படுகிறது. ஆனால் வடக்கு மாகாணத்தில் மட்டும் சம்பளம் வழங்குவதற்கு முன்னரே சம்பளத்தை வங்கிக் கணக்கில் பெற்று விட்டதாக ஆசிரியர்களிடம் கையொப்பம் வேண்டி பின்னரே வைப்பில் இடப்படுவதாக ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின், மாகாண பிரதம கணக்காளர் உட்பட மாகாண கல்வித் திணைக்களப் பணிப்பாளர் வரை தொடர்பு கொண்டு சுட்டிக்காட்டிய போது தவறை ஏற்றுக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சம்பளத்தை வழங்க முதலே பெற்றுவிட்டோம் என ஆசிரியர்களிடம் கையொப்பம் பெறுவதும் ஒருவேளை கையொப்பமிட்டு ஆசிரியர் இறந்துவிட்டால் அவரது சம்பளம் கிடைக்குமா என்ற கேள்விகளும் எழுந்துள்ளன.

ஆகவே முறையற்ற கையெழுத்திடல்கள் ஊழலுக்கு வழிவகுக்கும். அதுமட்டுமல்லாது அவ்வாறு கையொப்பம் இடாத ஆசிரியர்களின் சம்பளத்தை பிடித்து வைக்கும் வேடிக்கையும் வடக்கில் சில வலயங்களில் இடம்பெற்றுள்ளதாக அறியமுடிகிறது. ஆகவே குறித்த விடயம் தொடர்பில் வடமாகாண ஆளுநர் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உரிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் வேண்டப் படுகிறது.

# சட்டவிரோத மணல் கடத்தல் – மடக்கிப்பிடித்த பொலிஸார்







அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற மூன்று டிப்பர் வாகனங்களை மடக்கிப் பிடித்த பொலிஸார், வாகனத்தை கைப்பற்றியதுடன் , அதன் சாரதிகளையும் சாவகச்சேரி கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் – மன்னார் நெடுஞ்சாலையில், பயணித்த மூன்று டிப்பர் வாகனத்தை பொலிஸார் வழிமறித்த போது , பொலிஸாரின் கட்டளையை மீறி டிப்பர் வாகனங்கள் பயணித்துள்ளன.

அதனால் பொலிஸார் அவற்றை துரத்தி சென்ற வேளை பின்னால் சென்ற டிப்பர் வாகனம் மணலை வீதியில் கொட்டி , பொலிஸார் தம்மை பின்தொடராத வகையில் வாகனத்தை செலுத்தியுள்ளனர்.

இருந்த போதிலும் பொலிஸார் துரத்திச்சென்று மூன்று வாகனங்களையும் கைப்பற்றியதுடன் வாகன சாரதிகளையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சாரதிகளும் டிப்பர் வாகனமும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

# வீதி புனரமைப்பில் முறைகேடு

## சாவகச்சேரி நகரசபை முன்னாள் உறுப்பினர் கிஷோர் விசனம்





(பு.கஜிந்தன்)

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட மீசாலை -அல்லாரை பிரதான வீதி புனரமைக்கப்படுகின்ற பொழுது வீதியின் குறிப்பிட்ட சில இடங்களில் ஒரு அடி ஆழமான நீளமான குழிகள் தோண்டப்பட்டு அதற்குள் காவோலைகள் போடப்பட்டு அதற்கு மேலாக கற்கள் போடப்பட்டு வீதி புனரமைப்பது பொதுமக்களிடையே ஆச்சரியத்தையும் விமர்சனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான முறையில் பிரதான வீதி ஒன்று புனரமைக்கப்படுமா என்று மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட மீசாலை- அல்லாரை பிரதான வீதி புனரமைப்புப் பணியில் முறைகேடு இடம்பெறுவதாக சாவகச்சேரி நகரசபை முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது தொடர்பாக வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தினர் உடனடியாக உரிய நடவடிக்கை எடுப்பதோடு அதற்கான விளக்கத்தையும் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என சாவகச்சேரி நகரசபை முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# யாழில் திருட்டுக் கும்பல் பொதுமக்களின் உதவியை கோரும் பொலிஸார்

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, சுன்னாகம் பகுதிகளை அண்மித்துள்ள பல்பொருள் விற்பனை நிலையங்களில் திருட்டுக்களில் ஈடுபடும் குழுக்கள் தொடர்பான தகவல் கிடைத்தால் அறியத் தருமாறு பொதுமக்களை பொலிஸார் கோரியுள்ளனர்.

சுன்னாகம் பகுதியில் உள்ள பல்பொருள் விற்பனை நிலையம் ஒன்றுக்குள் நேற்று முன்தினம் பெண்ணொருவர் நுழைந்து பல பொருட்களை திருடி தமது ஆடைகளுக்குள் மறைத்து எடுத்து செல்வது அங்குள்ள பாதுகாப்பு கண்காணிப்பு கமராக்களில் பதிவாகியுள்ளது. இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இக் குழு தொடர்ச்சியாக இவ்வாறான திருட்டுக்களில் ஈடுபட்டு வருவதனால் அவர்கள் தொடர்பான தகவல்கள் தெரிந்தால் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களை கோரியுள்ளனர்.

# யாழ்.மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை முன்னெடுப்பு!



வடமராட்சி கிழக்கு பகுதிகளில் பரவிவரும் எலிக்காய்ச்சலை தடுக்கும் நோக்குடன் வைத்திய அதிகாரிகள் வீடுவீடாகச் சென்று எலிக்காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதுடன் doxicycline என்ற தடுப்பு மருந்துகளையும் வழங்கி வருகின்றனர்.

இந்நடவடிக்கையில் அடம்பன் பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி சிவசுதன் தலைமையிலான குழுவினரே தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

வடமராட்சி பகுதியில் அண்மைக் காலமாக எலிக்காய்ச்சலால் சில மரணங்கள் சம்பவித்துள்ளதுடன் தொற்றுக்குள்ளான பலர் இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருட்டுக்களில் ஈடுபட்டு வந்த இருவர் வவுனியாவில் கைது





(சிவகுமார் திவியா)

வடமாகாணத்தில் மயக்க மருந்து கொடுத்து நகைகள் மற்றும் வாகனங்களை திருடும் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

மயக்க மருந்து கொடுத்து நகைகள் மற்றும் வாகனங்களை திருடும் குழு ஒன்று நாடளாவிய ரீதியில் இயங்கி வருகிறது. இந்நிலையில் வவுனியா நகரப் பகுதியில் இருந்து குறித்த குழுவினர் முச்சக்கர வண்டி ஒன்றை வாடகைக்கு அமர்த்திச் சென்று முச்சக்கர வண்டி சாரதிக்கு மயக்க மருந்தை கொடுத்து அவரை கீழே தள்ளி விட்டு முச்சக்கர வண்டியை கடத்திச் சென்ற சம்பவம் ஒன்று பதிவாகியிருந்தது.

இது தொடர்பில் வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சமந்த விஜசேகரவின் ஆலோசனையில் வவுனியா பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மலன் பெரேராவின் வழிநடத்தலில் வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி அழகியவண்ண தலைமையிலான பொலிஸார் விசேட தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டு அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த முச்சக்கர வண்டி இலக்கத்தகடு மாற்றப்பட்டு விற்பனை செய்திருந்தமை தெரிய வந்ததையடுத்து குறித்த முச்சக்கர வண்டி மீட்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் வடக்கில் இடம்பெற்ற மேலும் சில குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டுள்ளமை தெரியவந்துள்ளது. வவுனியா, உளுக்குளம் பகுதியில் வைத்து முச்சக்கர வண்டி சாரதி ஒருவருக்கு மயக்க மருந்து கொடுத்து விட்டு அவரது மோதிரத்தை திருடிச் சென்றமையும் இதன்போது தெரியவந்துள்ளது.

இதனையடுத்து திருடப்பட்ட நகைகள் விற்கப்பட்ட இடத்தில் உருக்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது. இதேவேளை குறித்த இரு நபர்களிடம் இருந்தும் முச்சக்கர வண்டி மற்றும் 4 அரைப் பவுண் நகை என்பன மீட்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் ஹட்டன் பகுதியைச் சேர்ந்த 45 வயது நபரும் மன்னார், வங்காலைப் பகுதியைச் சேர்ந்த 47 வயது நபரும் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா வடக்கில் பப்பாசிச் செய்கை பாதிப்பு; நிலைமைகளை பார்வையிட்டார் ரவிகரன் எம்.பி



(சிவகுமார் திவியா)

வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் செய்கை பண்ணப்பட்ட பப்பாசிச் செய்கை கன மழை காரணமாக முழுமையாகவும் பகுதியளவிலும் பாதிப்படைந்துள்ளது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கோரிக்கைக்கு அமைவாக பாதிக்கப்பட்ட சில பப்பாசித் தோட்டங்களை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன் விவசாயிகளுக்கு நட்டஈடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு உரியதரப்பினர்களுடன் பேசுவதாகவும் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா வடக்கு பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட 21கிராமஅலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 500 விவசாயிகளுக்கு பசுமை அக்ரோ தனியார் நிறுவனத்தினால் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தினூடாக ஒருவிவசாயிக்கு அரை ஏக்கர் வீதம் மொத்தம் 250ஏக்கரில் பப்பாசி, மிளகாய் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் விவசாயிகளின் பாரிய நிதிச்செலவில் செய்கைபண்ணப்பட்ட பப்பாசிச் செய்கை அண்மையில் பெய்த கனமழையினால் சில தோட்டங்கள் முழுமையாகவும் சில தோட் டங்கள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக பப்பாசிச் செய்கைகள் அறுவடைக்குத் தயாரானநிலையிலேயே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன.இந் நிலையில் பாதிக்கப்பட்ட சில விவசாயிகள் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் முறையிட்டதற்கு அமைவாக அவர் நயினாமடு, மதியாமடு, சன்னாசிபரந்தன் உள்ளிட்ட கிராமங்களில் பாதிக்கப்பட்ட பப்பாசிச் செய்கைகளைப் பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்ட விவசாயிகளிடம் பாதிப்பு நிலைமைகள் தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார். இதேவேளை பாதிக்கப்பட்டுள்ள பப்பாசிச் செய்கையாளர்களுக்கு நட்டஈடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

# யாழில் உலக சுற்றுலா தின கலை கலாசார வாகன பவனி











(பு.கஜிந்தன்)

வடமாகாண சுற்றுலா பணியகம் மற்றும் வடமாகாண அமைச்சு என்பன இணைந்து நடத்திய "சுற்றுலாவை மேம்படுத்தி எதிர்காலத்தில் மாற்றத்தை உருவாக்குவோம்" என்னும் கருப்பொருளிலான உலக சுற்றுலா தின கலை கலாசார வாகன பவனி நேற்றுமுன்தினம் (15) மாலை யாழ்ப்பாணம் பொது நூலக முன்றலில் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

யாழ்ப்பாணம் பொது நூலக முன்றலில் ஆரம்பமான வாகன பவனி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வீதி, கே.கே.எஸ் வீதி ஊடாக சென்று யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்ட பகுதியில் நிறைவடைந்தது.

இதன்போது கலாசார நிகழ்வுகளான மேளதாள நாஸ்வர இசைகள், சிறுவர் நடனங்கள், கோலாட்டம், பொம்மலாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம் உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெற்றன. மேலும் வாகன பவனியில் 1968 தொடக்கம் 2001ஆம் ஆண்டு காலப்பகுதி வரையான கார்கள், மோட்டார் சைக்கிள்கள், மாதிரி புகையிரத வண்டி என்பன பயன்படுத்தப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், வடமாகாண சுற்றுலா பணியகம், வடமாகாண அமைச்சின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# சிம்பாப்வேயுடனான ரி20 தொடர் ஆப்கான் வசம்



சிம்பாப்வே அணியுடனான 3 போட்டிகள் கொண்ட ரி 20 சர்வதேச தொடரை ஆப்கானிஸ்தான் அணி 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி சிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி20, 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. இதில் முதலில் ரி20 தொடர் நடைபெற்றது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ரி20 போட்டியில் சிம்பாப்வே அணியும், 2வது போட்டியில் ஆப்கானிஸ்தானும் வெற்றி பெற்றன.

இந்நிலையில், தொடர் வெற்றியாளரை தீர்மானிக்கும் 3வது ரி20 போட்டி ஹராரேவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. முதலில் பேட்டிங் செய்த சிம்பாப்பே 19.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 127 ரன்னுக்குள் சுருண்டது. தொடர்ந்து 128 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் புகுந்த ஆப்கானிஸ்தான் அணி 19.3 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 128 ரன்கள் எடுத்து வெற்றி பெற்று 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

# மழையால் 5.38 கோடி நட்டத்தை எதிர்கொண்ட ஆஸி. கிரிக்கெட் சபை

இந்திய – அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் பிரிஸ்பேனில் நடைபெற்றுவரும் 3ஆவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் மழை காரணமாக 13.2 ஓவர்கள் மட்டுமே வீசப்பட்ட நிலையில் கைவிடப்பட்டது.

இந்த போட்டியை பார்வையிடுவதற்காக 30,145 ரசிகர்கள் டிக்கெட் வாங்கியிருந்தனர். அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் விதிகளின்படி டெஸ்ட் போட்டியின் தினத்தில் குறைந்தபட்சம் 15 ஓவர்கள் வீசப்படாவிட்டால் ரசிகர்களுக்கு டிக்கெட் கட்டணத்தை 100 சதவீதம் திருப்பி வழங்க வேண்டும்.

இதன்படி 30,145 ரசிகர்களுக்கும் டிக்கெட்டின் முழுத் தொகை திரும்ப வழங்கப்படும் என அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. அந்தவகையில் சுமார் ரூ.5.38 கோடியை திரும்ப வழங்கவுள்ளது. மோசமான காலநிலையால் ஏற்படும் இழப்புகளை ஈடுகட்ட அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை போட்டிகளை காப்பீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




## மேசைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில்

# மொரட்டுவ, ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்கள் சம்பியன்




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொன்விழா நிகழ்வுகளின் வரிசையில் இலங்கையிலுள்ள அனைத்து அரச பல்கலைக்கழகங்களுக்கும் இடையில் நடத்தப்பட்ட மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் யாழ். பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில், இலங்கைப் பல்கலைக்கழகங்களின் விளையாட்டுச் சம்மேளன அங்கீகாரத்துடன் இடம்பெற்ற இந்தச் சுற்றுப் போட்டியில் இலங்கையிலுள்ள அனைத்து அரச பல்கலைக்கழகங்களினதும் ஆண், பெண் அணிகளுக்கிடையில் போட்டிகள் இடம்பெற்றன.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவைச் சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணர் எஸ்.மதிவாணன் மற்றும் பொது வைத்திய நிபுணர் அனோஜா மதிவாணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் விளையாட்டுச் சம்மேளனத் தலைவரும் இரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞானங்கள் பீடாதிபதியுமான கலாநிதி மனோஜ் பெர்னாண்டோ கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

ஆண்கள் பிரிவில், மொரட்டுவப் பல்கலைக்கழக அணி அதிக புள்ளிகளைப் பெற்றுச் சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டது. ஸ்ரீஜெயவர்த்தனபுர, களனிப் பல்கலைக்கழகங்களின் அணிகள் முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களைத் தமதாக்கிக் கொண்டன.

பெண்கள் பிரிவில், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அணி அதிக புள்ளிகளைப் பெற்றுச் சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டது. மொரட்டுவ, கொழும்புப் பல்கலைக்கழகங்களின் அணிகள் முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களைத் தமதாக்கிக் கொண்டன.

# இரண்டாவது தடவையாக சர்வதேச கிரிக்கெட் ஓய்வை அறிவித்த ஆமிர்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வேகப் பந்துவீச்சாளரான 32 வயதுடைய முஹமட் ஆமிர் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து இரண்டாவது தடவை தனது ஓய்வை அறிவித்தார். இவர் பாகிஸ்தான் அணிக்காக 36 டெஸ்ட், 61 ஒருநாள் மற்றும் 62 ரி20 போட்டிகளில் ஆடியுள்ளார்.

பந்தை வேகமாக வீசுவதிலும் ஸ்விங் செய்வதிலும் வல்லவராக இருந்தார் ஆமிர். ஆனால், ஊக்கமருந்து பாவனை சர்ச்சைகளில் சிக்கி கிரிக்கெட் ஆட தடை விதிக்கப்பட்டு மோசமான நிலையையும் அடைந்தார். இவர் கடந்த 2020ஆம் ஆண்டே சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வை அறிவித்திருந்தார். ஆனால், கடந்த ஆண்டு ரி20 உலகக்கிண்ணத்தில் பாகிஸ்தான் அணியில் இடம் பெற வேண்டி தனது ஓய்வு முடிவை திரும்ப பெற்றுக் கொண்டார்.

ரி20 உலகக்கிண்ணம் முடிந்த பின் அவருக்கு பாகிஸ்தான் அணியில் அதிக வாய்ப்பு கிடைக்கவில்லை. இதையடுத்து தற்போது மீண்டும் ஓய்வை அறிவித்து இருக்கிறார். பாகிஸ்தான் அணி 2009 ரி20 உலகக்கிண்ணத்தை வென்றதில் ஆமிருக்கு முக்கிய பங்கு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கோல் மார்வெல்ஸ் அணி உரிமையாளருக்கு நாளை வரை தொடர்ந்து விளக்கமறியல்

**(அகீல் சிஹாப்)**

பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றுவரும் லங்கா ரி10 சுப்பர் லீக் தொடரில் ஆட்ட நிர்ணயம் செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கோல் மார்வெல்ஸ் அணியின் உரிமையாளரான இந்தியாவைச் சேர்ந்த பிரேம் தாக்கரை தொடர்ந்து நாளை (18) வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

லங்கா ரி10 சுப்பர் லீக்குடன் தொடர்புபட்ட பிக்சிங் அணுகுமுறையின் குற்றச்சாட்டை அடுத்து, கடந்த வியாழக்கிழமை கோல் மார்வெல்ஸ் அணியின் உரிமையாளரான பிரேம் தாக்கர் இலங்கையின் விளையாட்டுப் பொலிஸ் பிரிவினால் கைது செய்யப்பட்டார். சூதாட்டம் தொடர்பான சந்தேகத்துக்கிடமான சலுகையுடன் அணுகப்பட்டதாகக் கூறி வெளிநாட்டு வீரர் ஒருவர் புகார் அளித்ததை அடுத்து கைது செய்யப்பட்டார்.



பின்னர் அடுத்த நாள் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்ட அவரை நேற்று (16) வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. இந்நிலையில் இந்திய பிரஜையான பிரேம் தாக்கரை நாளை (18) வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. இந்த சம்பவம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுத் துளிகள்

★ இந்திய – மே.இ. தீவுகள் மகளிர் அணிகள் மோதிய முதல் ரி20 சர்வதேச போட்டியில் இந்திய மகளிர் அணி 49 ஓட்டங்களினால் வெற்றியீட்டியது. 3 போட்டிகள் கொண்ட ரி 20 தொடரின் 2வது போட்டி இன்று நவிமும்பையில் நடைபெறுகிறது.

★ ஆஸி. அணியுடனான 3வது டெஸ்டில் களமிறங்கியதன் மூலம் அந்த அணிக்கு எதிராக தனது 100-வது சர்வதேச போட்டியில் விராட் கோலி விளையாடி சாதனை படைத்துள்ளார். அதாவது ஆஸி. அணிக்கு எதிராக 100வது சர்வதேச போட்டியில் ஆடிய 2-வது இந்திய வீரர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார். முதல் வீரராக ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் (110 போட்டிகள்) உள்ளார்.

## இன்றைய போட்டிகள்

LANKA T10 SUPER LEAGUE

**போட்டி இல - 19**
கொழும்பு ஜாகுவார்ஸ்
VS
ஜவ்னா டைட்டன்ஸ்
பி.ப - 4.00 மணி

**போட்டி இல - 20**
நுவரெலியா கிங்ஸ்
VS
கண்டி ப்ளொட்ஸ்
பி.ப - 6.15 மணி

**போட்டி இல - 21**
ஹம்பந்தோட்டை பங்ளா டைகர்ஸ்
VS
கோல் மார்வல்ஸ்
பி.ப - 8.30 மணி

# கடைசி ஓவரில் த்ரில் வெற்றியீட்டிய பங்களாதேஷ்




மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான 3 போட்டிகள் கொண்ட ரி20 சர்வதேச தொடரின் முதல் போட்டியில் கடைசி ஓவரில் பங்களாதேஷ் அணி 7 ஓட்டங்களினால் த்ரில் வெற்றியீட்டியது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி அங்கு இரு டெஸ்ட், தலா 3 போட்டிகள் கொண்ட ஒருநாள், ரி20 தொடர்களில் ஆடுகிறது. முதலில் நடைபெற்ற டெஸ்ட் தொடர் 1-1 என சமநிலையிலும் அடுத்து ஒருநாள் தொடரை 3-0 என்ற அடிப்படையில் மே.இ.தீவுகள் அணியும் கைப்பற்றியிந்தன.

இந்நிலையில் ரி20 தொடரின் முதல் போட்டி கிங்ஸ்டவுனில் இலங்கை நேரப்படி நேற்று (16) காலை நிறைவடைந்தது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மே.இ.தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்ய முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் இழப்புக்கு 147 ஓட்டங்கள் பெற்றது.

148 என்ற இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய மே.இ. தீவுகள் அணி 19.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 140 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இரு அணிகளுக்குமிடையிலான 2வது ரி20 போட்டி நாளை (18) அதிகாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7